★ மங்கையின் கண்ணீர்..... (அரங்கண்ணல்) ★

திராவிடநாடு

1-4-56 ★ வார வெளியீடு ★ விலை 2 அணா

★

வெண்புருவும் பீரங்கியும்

★

பேதைமை

★

ஆதிக்கபுரி வளர்கிறது

★

இடையில் சில நாட்கள்தான்

★

கேட்டீரா சேதியை!

மிகவும் அழகான ஆடை எது? நம்முடைய சேலைதானாம்! இவ்வண்ணம் உலகெல்லாம் சுற்றிய அமெரிக்க மதப் பிரசாரகரான டாக்டர் பில்லிகிரகாம் என்பவர் இந்தியாவுக்கு வந்தபோது கடந்த பிப்ரவரி 2-ந் தேதி புது டில்லியில் தெரிவித்தார். உலகத்திலேயே மிகமிக அழகான ஆடை, என்று அவர் வருணித்திருக்கிறார்! ஆனால் இவ்வளவு அழகான ஆடைகளை செய்யும் நெசவாளர்கள் என்னென்ன சங்கடங்களை அனுபவிக்கிறார்கள் என்பது அவருக்கு எப்படித் தெரியும்?

*

ஆடைகள் விஷயம் ஒருப்க்கம் இருக்கட்டும். தென்னங் கீற்றுகளைக் கொண்டு பந்தல் போடுகிறார்களல்லவா, நம்மவர்கள். இந்த அருமையான கலை எங்களுக்குத் தெரிவதில்லையே! என்று நம்முடைய கவர்னர் கடந்த மாதம் ஈரோட்டில் பேசுகையில் வெளியிட்டிருக்கிறார். நேரு பண்டிதர், தென்னாட்டுக்கு வந்தபோது சொன்னாராம், 'எவ்வளவு அழகாக தமிழ் நாட்டில் பந்தல் போடுகிறார்கள். இந்தக் கலையை வடநாட்டிலிருக்கும் நம்மவர்களுக்குச் சொல்லித்தர தெற்கிலிருந்துசிலபேரையாவது அழைத்துக்கொண்டு போக வேண்டும்" என்பதாக. தென்னாட்டில் பந்தல் போடுவதுபோல இந்தியாவின் எந்தப் பகுதியிலும் போடுவதில்லையாம்! மறற இடங்களிலிருப்போர்தான் நன்றாக வாய்ப்பந்தல் போடுகிறார்களே என்று சொல்லுகிறீர்களா!

*

டில்லி அமைச்சர்களிலேயே மௌலானா ஆசாத் இருக்கிறாரே, அவர் ஒரு ஐயோ பாவம்! சமீபத்தில் அவரைப் பேட்டிகண்ட ஒரு நிருபர் "இராசேந்திரபிரசாதுக்கு அடுத்தபடி நீங்கள் குடியரசுத் தலைவராக வரப்போவதாகச் சொல்லப்படுவது உண்மையா?" என்று கேட்டாராம். அதற்கு அவர் பதில் சொன்னாராம், "ஜனாதிபதி பதவியில் நாள் பூராவும் என்ன வேலையைச் செய்யமுடியும்? நல்ல சொகுசான வீடும், அழகான தோட்டமும் கிடைக்குமென்பது மட்டும் உண்மைதான். ஆனால், என்ன வேலையிருக்கிறது, அப்பதவியில்?" ஆசாத், பிரபல காங்கிரஸ் தலைவர், டில்லி அமைச்சர். அவர் கூறுகிறார், கவர்னர் வேலைகளைப்போல ஜனாதிபதி பதவியும் ஒருவேலையுமற்ற சோம்பேறிப் பதவி என்பதாக.

*

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, ஆசாத் வர்ணிக்கும் இந்த ஜனாதிபதி மாளிகையில் யானையைக் கட்டித் தீனிபோடுவதற்காகப் பல்லாயிரக் கணக்கான ரூபாய் ஏன் செலவிடப்படுகிறது? — என்று பார்லிமெண்டில் ஒருவர் கேட்டார், நேரு பண்டிதரை. கடுங்கோபம் வந்துவிட்டது, பண்டிதருக்கு. "இப்படியெல்லாம் கேள்வி கேட்கக் கூடாது. நம்முடைய ஜனாதிபதியென்று சொன்னால் அவருக்கெனச் சில சம்பிரதாயச் செலவுகள் செய்துதான் ஆகவேண்டும். செலவாகிறதே என்பதற்காக அவரைப் போய்க் குடிசையிலிருக்கச் செய்ய முடியுமா?" என்று. இப்படி அநாவசியமாக வரிப்பணத்தை விரயமாக்கி, அழகுப் பொம்மையாக இருக்க ஏன் இந்த ஜனாதிபதிப் பதவி? அமெரிக்காவிலிருக்கும் ஜனாதிபதி பதவிக்குத்தான் சகல பொறுப்புகளும். இங்கு, பிரதம மந்திரிக்குத்தான் எல்லா அதிகாரங்களும். அப்படியிருக்கும்போது அநாவசியமாக ஏன் ஒரு ஜனாதிபதி? அவருக்கு டில்லியில் ஒரு மாளிகை, ஐதராபாத்தில் ஒருமாளிகை. அடிக்கடி சுற்றுப் பிரயாணச் செலவுகள்?

*

"நான்கூட ஜனாதிபதியை எதிர்த்துப் பேசியிருக்கிறேன். ஆனால், ஆசாதைப்போல இவ்வளவு கடுமையாகப் பேசியதில்லை" என்று சோஷியலிஸ்டுத் தலைவரான டாக்டர் லோகியா ஒரு அறிக்கையில் வியப்போடுகுறிப்பிட்டிருக்கிறார். ஐதராபாத்திலிருந்து, அண்மையில் அவர் நம்மைப் பாராட்டி ஒரு சேதி விடுத்தாரல்லவா? "திராவிட முன்னேற்றக் கழக அண்ணாதுரையை நான் சந்தித்தேன். அவர்கள், தனிநாடு கேட்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால், சமுகத்தில் நிலவும் வேற்றுமைகளை ஒழித்து சமநீதி நிலவ அவர்கள் பாடுபடுவது மிகவும் பாராட்டப்படவேண்டியதாகும்" என்று. அதைக்கண்டதும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஏட்டுக்கு மகா கோபம் வந்து ஒரு துணைத் தலையங்கமே தீட்டியிருக்கிறது, லோகியாவையும் நம்மையும் தாக்கி. நாம் வகுப்புவாதிகளாம், சமநீதி விரும்புகிறவர்கள் அல்லவாம்.

*

இப்படி வகுப்புவாதி வகுப்புவாதி என்று சொல்லிக் கொண்டேயிருக்கும் புத்தி இந்தக் கூட்டத்துக்கே போகாது போலும். இப்படி நம்மீது பழி சுமத்திக்கொண்டே தங்களது வாழ்நாட்களைக் கழித்துவிடலாம் என்று கருதுகிறார்கள். ஆனால், காலம் எவ்வளவு வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது.

*

இந்நாட்டுப்பார்ப்பனத் தலைவர்களும் சரி, காங்கிரஸ்காரர்களும் சரி, நம்மீது சுமத்தக் கூடிய குற்றச்சாட்டுகள் எதுவும் தென்படாததால் பழைய பல்லவிகளையே தேடிப் பிடிக்கின்றனர். காமராஜர், பக்தவத்சலம் போன்றவர்கள் பேசுகிற கூட்டங்களில் சொல்லுகிறார்களாம், "இந்த முன்னேற்ற கழகத்தார் யார் தெரியுமா? வெள்ளைக்காரனுக்குத் தாசர்களாயிருந்த கட்சியைச்சேர்ந்தவர்கள்" என்பதாக. உண்மைதான். நாம் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான். ஆனால், நமது குருநாதர் பெரியார் மட்டும்...? அவரோடுபோய்க் கூடிக் குலவலாம். நாம், அவரைப் போல இவர்களைக் கருதவில்லையென்றதும் எரிச்சல், பாய்ச்சல், அதற்கு, ஏதோ ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து பாயவேண்டும். நல்ல ஆட்கள் அகப்பட்டார்கள் நாட்டின் நாயகர்களாக விளங்க!

★

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 39
1-4-56

வெண்புருவும் பீரங்கியும்

உலகம் போற்றும் நேருபண்டிதர், வெண் புருக்களைப் பறக்க விடுகிறார், ஆனந்தத்தோடு.

அவருடைய தலைமையில் இயங்கும் சர்க்கார், அதே சமயத்தில் இராணுவத்துக்கென சுமார் 250 கோடியை அள்ளி இறைத்துக்கொண்டுள்ளது.

இதென்ன அதிசயம்!—என்று, வியப்போடு பார்க்கிறது, உலகம். ஒத்துவாழும் முறையைப் போதிக்கும் உத்தமர், சமாதானச் சங்கினைச் சதா முழக்கிடும் சத்வ குணபோதன், புத்தர் பிரானின் பெருமையைப் போற்றிடத் தவறாமான், போரினை நடாத்தி 'புண்பட்டோரையும் இறந்துபோன உயிர்களையும் எண்ணி இனிப் போரே செய்யமாட்டேன்' என்று சூளெடுத்துக்கொண்ட அசோக மன்னனின் சின்னத்தை அரசு இலச்சினையாக ஏற்றுக்கொண்டிருக்கும் அகிம்சாவாதியின் ஆட்சியிலே ஆண்டுக்கு 250 கோடி ரூபாயா, வருமானத்தில் பாதித் தொகையா பீரங்கிக்கும் குண்டுகளுக்கும் என்று ஆச்சரியத்தோடு பார்க்கிறது.

ஆனால், நேரு பண்டிதரின் 'தயை' பெறத் தவம் கிடைக்கும் நமது பாரத புத்திரர்கள் எவரும் இதனை எடுத்துக்காட்டவோ, இடித்துரைக்கவோ, முன்வரவில்லை. மாறாக ஒத்தூதுகின்றனர்! அண்மையில் டில்லிப் பார்லிமெண்டில் இதுபற்றிய விவாதம் நடைபெற்றபோது பல உறுப்பினர்கள், ஏதோ இந்தியாவுக்கு ஆபத்து வந்து விட்டதுபோல அலறி அலறிப் பேசினரே ஒழிய, எவரும் முன்வரவில்லை—தவறினை எடுத்துக்காட்ட.

இப்போது, நல்ல சாக்கு ஒன்று கிடைத்து விட்டது! பஞ்சாபின் எல்லைகளில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் இரண்டொரு சம்பவங்களை, செய்திப் பீரங்கிகள் பிரமாதப்படுத்தி வருகின்றன. பாகிஸ்தானியரின் அத்து மீறிய பிரவேசம்—ஆக்கிரமிப்பு நடத்த முயற்சி என்று அனுதினமும் முரசொலிக்கின்றன. அதற்கு வாய்ப்பாக, அங்கே சீடோ மாநாடு நடந்ததும், பாகிஸ்தான் பாக்தாத் ஒப்பந்தத்தில் சேர்ந்திருப்பதும் பெரிதாக எடுத்துக் காட்டப்படுகிறது. காக்கைஉட்காரபனம்பழம்விழுந்த கதையைப் போல இந்தச் சந்தர்ப்பத்தில், எல்லையோரச் சம்பவங்கள் நடந்ததால், இரண்டிற்கும் முடிச்சுப் போட்டு பெரியதொரு பரபரப்பு உண்டாக்கப் பட்டிருக்கிறது! அப்படி பரபரப்பு உண்டாக்கிய தன் பலன் கைமேல் கிடைத்தும் இருக்கிறது—பஞ்சாபியர் தம் மனதில் ஒரு உத்வேகத்தை யுண்டு பண்ணி, அங்கு நடைபெற்ற விடுதலைக் கிளர்ச்சியின் வேகத்தைக் குறைக்கவும், அவர்களுக்குப் பொது ஆபத்தினை எடுத்து விளக்கி அவர்தம் ஆதரவைப் பெறவும் முயன்று வெற்றி பெற்றிருக்கிறது, டில்லி.

நேரு பண்டிதரின் தொல்லை குறைய இந்தப் பரபரப்பு பயன்பட்டதோடு நின்றுவிட்டதா என்றால் இல்லை, தினம் தினம் இதுபற்றி அறிக்கைகளும் செய்திகளும் வந்துகொண்டே உள்ளன. மக்கள் மனதில், ராஜ்ய புனரமைப்பு பற்றி இருக்கும் உணர்ச்சிகளைத் திருப்பிவிடும் வகையில், பரபரப்பு பயன் படுத்தப்பட்டு வருகிறது. ஏதோ இன்னும் ஏழெட்டு நாட்களில்பாகிஸ்தான், படைகளோடு நம் மீது பாயப் போவதைப்போல!!

இந்தப் பயமும் பிரச்சாரமும் எவ்வளவு அர்த்த மற்றது என்பதை பாகிஸ்தான் குடியரசுத் தலைவர், குடியரசு விழா நாளில் எடுத்துரைத்துள்ளார். நேரு பண்டிதர் அறிவுரை கூறுவது போலவே, அவரும் கூறுகிறார், "இப்படி இருநாடுகளும் சச்சரவு இட்டுக்கொள்வது இருவரும் தற்கொலை செய்து கொள்வதற்குச் சமானம்" என்பதாக. பாகிஸ்தான் பிரதமர், நேரு பண்டிதருக்கு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்திருக்கிறாராம், "இப்படிப்பட்ட பயம் நீங்க நாம் இருவரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வோம்" என்பதாக. ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இரு நாடுகளும் எவ்வித சண்டை சச்சரவுகளிலும் ஈடுபடுவதில்லை என்று ஒரு ஒப்பந்தத்தைப் பிரகடனம் செய்துகொண்டால், இரு நாட்டு மக்களையும் பீடித்திருக்கும் பயமும் பரபரப்பும் ஒழிய வகை ஏற்படும்!

அதுமட்டுமல்ல, பாகிஸ்தான் கோரிக்கைக் குரல் எழுப்பிய நாள் முதல் எதிர்த்து வந்தவர்களாகும் இன்றைய காங்கிரஸ் தலைவர்கள். ஏற்றுக்கொள்ளாவிடில், அரசுப் பொறுப்பு கிடைக்காது எனத் தெரிந்ததும் நாட்டுப் பிரிவினைக்கு சம்மதம் தந்தார்கள். அன்று முதல் பொதுவாகவே, இருவரது உள்ளத்திலும் அச்சமும் வெறுப்பும் நீங்கிய பாடில்லை. அதனைப் போக்கிடும் பொறுப்பும்சிறப்பும் பெற்றிருக்கும் நேரு பண்டிதரோ, அதற்கான முயற்சிகளில் அவ்வளவாக ஈடுபட்டாரில்லை! காஷ்மீர், பெரிய பிரச்னையாகி நிற்கிறது. ஒத்து வாழ்தலும், வித்தியாசங்களை நேரடியாகப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்கிற போதனையும் உலகுக்குத்தானே ஒழிய தனக்கு இல்லை! வெண்புரு, பறக்கவிடப்படுகிறது, உலக அமைதிக்காக. சொந்த நாட்டிலோ, பீரங்கிகள் தயார் செய்யப்படுகின்றன!

இந்தக் குற்றச்சாட்டினை நேரு பண்டிதர் மீது நாம் சுமத்தினால், "இவர்களுக்கென்ன வேலை! எப்போதும், எங்கள் நேருவையும் காங்கிரசையும் குறை சொல்லிக்கொண்டிருப்பதே இவர்கள் தொழில். வேறென்ன சொல்லுவார்கள்?" என்று கூறக்கூடியவர்கள், ஏராளம்.

இதோ ஒருவர் கேட்கிருர்: "அடிக்கு அடிகொடுக்க நாங்களும் தயார் தான் என்று நம்முடைய சர்க்கார் தெரிவிக்கிறது. இப்படி இராணுவ முஸ்தீபுக்களைச் செய்வதற்குப் பதில் பக்கத்து நாட்டின் பயத்தைக் குறைக்க ஏன் முயற்சிக்கக் கூடாது, நாம்? பாகிஸ்தான், மிகவும் பயமடைந்திருக்கிறது, என்பது உண்மை! அந்தப் பயத்தைப் போக்கும், நடவடிக்கையாக நம்முடைய இராணுவச் செலவைக் குறைத்துக் காட்டலாமே. பூரா இராணுவத்தையுங்கூட கலையுங்கள் என்று நான் சொல்லவில்லை. அதற்காகச் செலவழிக்கப்படும் ரூபாய்களைப் பாதியாகக் குறைத்து நமது சமாதான ஆர்வத்தைக் காட்டிக்கொள்ளக் கூடாதா? இதற்குத் தயாரா நம்முடைய பிரதம மந்திரி?"

பாகிஸ்தான்பயமடைந்திருக்கிறது, அதனால்தான் இப்படி அங்குமிங்கும் ஆதரவைத் தேடி அலைகிறது என்கிருர், இவர்!

இதனை, நாம் சொன்னல் நம்மை தேசத் துரோகிகள் என்று தூற்றும் சீலர்கள், உண்டு இங்கே. மேற்குறித்த வண்ணம், கூறியிருப்பவர், நேரு உள்பட சகல காங்கிரஸ்காரர்களாலும் போற்றப்படுபவர். உத்தமர் காந்தியின், முதற் சீடர் தவயோகி எனப் புகழப்படும் ஆச்சாரியா வினேபா பாவே அவர்கள் தான் இவ்வண்ணம் அதோனி எனுமிடத்திலே கடந்த 25ந் தேதி வெளியிட்டிருக்கிருர்.

"இப்படி நாம் மட்டும் இராணுவத்தைக் குறைத்துக்கொள்வதால், என்ன லாபம்? நம்மைப்போல எல்லா நாடுகளும் முன் வந்தாலொழிய, இது எப்படி சாத்யமாகும்?" என்ருெருவர், அதே இடத்தில் விேைபாவைக் கேட்டிருக்கிருர்.

அதற்கு விேைபா அளித்திருக்கும் பதில் மிகவும் கூர்ந்துணர வேண்டியதாகும்.

"இதுபோலப் பாகிஸ்தானையும் செய்யச் சொல்வீர்களா, என்று கேட்கிறீர்கள். நிச்சயம் செய்யச் சொல்லலாம். ஏன், முடியாது? ஆனல், ஒன்று அப்படி அவர்களிடம் போய் பேரம் பேசுவதற்கு முன் நம்முடைய நல்லெண்ணத்தையாவது காட்ட வேண்டாமா? அது இல்லாமல், எப்படிப்போய் அவர்களைக் கேட்கமுடியும்!"

பிறருக்கு அறிவுரை கூறுவதற்கு புறப்படுமுன், நம்மை நாமே சீர்திருத்திகொள்ள வேண்டும் என்கிருர், விேைபா.

நேரு பண்டிதரோ, உலகுக்கெல்லாம் போதனை புரியக் கிளம்புகிருரே ஒழிய, முதலில் தன் மனதையே அவர் செம்மைப்படுத்திக்கொள்ளவில்லை. அதனல்தான், பக்கத்து நாடான பாகிஸ்தானுடன்கூட ஒத்துப் போக முடியவில்லை, இவர்களால்.

பாகிஸ்தானிலிருப்பவர்கள் எல்லாம் சத்யசந்தர்கள், நேர்மை தவருத நெறியாளர்கள் என்று நாம் கூறவில்லை. ஆனலும், காங்கிரஸ்காரர்களின் நடத்தையும், ஏடுகளின் பிரச்சாரமும் அங்கு வாழ்வோரைக் குறைத்து மதிப்பிடுவதாகவேஇருந்து வருவதை நாம் மறுக்கமுடியாது.

உலகுக்கு அன்பு மார்க்கத்தைப் போதித்து என்ன பயன்! முதலில், தன் இதயத்தையல்லவோ செம்மைப் படுத்திக்கொள்ளவேண்டும்!

அந்த வழியில்லை இன்று, இந்தியாவில். சவாலுக்கு எதிர்சவால் விடுவதுபோலவே இருக்கிறது. இதனல் எவ்வித பயனும் ஏற்படமுடியாதென்றே கருதுகிருேம்.

*

ஆதிக்கபுரி வளர்கிறது!

"...ஐயோ, ஒரு தமிழன் வீடில்லாமல் தவிக்கிருனே, அவனுக்கு உதவி செய்யலாமே என்று இரக்கம் கொண்டு வீடு கொடுக்கிருர்களா?"

"எல்லாரையும் அப்படிச் சொல்ல முடியாது, சார்"

"சார், உங்களுக்கு அனுபவம் போதாது. நான் இதுவரை பத்து வீடுகள் மாற்றிவிட்டேன். ஒவ்வொருவரும் ஒரு காரணத்துக்காகத்தான் குடிவைத்துக் கொண்டார்களே தவிர இரக்கத்தின் பேரில் அல்ல. ஒரு வீட்டுக்காரனுடைய மனைவிக்கு ஒரு கை நொண்டியாகப் போய்விட்டது, சார். அவன் என் மனைவியை வேட்டி துவைத்துப் போடச் சொல்லியிருக்கிருன் சார்"

"என்ன அக்கிரமம்! ஓங்கி அறைவது தானே?"

"நடுத்தெருவுக்கு சாமான் போயிருக்கும்"

*

"வடநாடு, தென்னட்டைச் சுரண்டுகிறது என்று சொல்கிறீர்கள். டில்லி சர்க்கார் காரியாலயங்களில் போய்க் கேட்டால், தெரியும். அங்கிருப்போர், தென்னடு எங்களைச் சுரண்டுகிறது என்று சொல்கிருர்கள், தெரியுமா?" என்று வடநாட்டுத் தலைவர்கள் இங்கு வரும்போது கூறுகிருர்களல்லவா, அவர்களுக்குப் பதிலளிப்பதுபோல இருக்கிறது இவ்வார சுதேசமித்திரன் ஞாயிறு இதழில் 'இது தான் டில்லி!' எனும் தலைப்பில் தீட்டப்பட்டிருக்கும் கட்டுரையில் தரப்பட்டிருக்கும் மேற்குறிப்பிட்ட பகுதிகள்.

"ஐயோ! ஒரு தமிழன் வீடில்லாமல் தவிக்கிருனே, அவனுக்கு உதவி செய்யலாமே என்று இரக்கம்கொண்டா வீடு கொடுக்கிருர்கள்?" என்று கேட்கிருர் கட்டுரையாளர்.

அப்படி வீடு கொடுப்போரும் தங்களுடைய வேலைக்காரிகளைப் போலக் கருதுகிருர்களாம்! அதற்காகவே, வீடுகளைக் கொடுக்கிருர்களாம், வாடகைக்கு!!

வீடு விஷயம் எப்படியாயினும் சரி, வந்தவர்களை உபசரிப்பதிலும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருவதிலும் தமிழருக்கு நிகர் தமிழர்களே தான். தன்னுயிரைப்போல் மன்னுயிரை ஓம்பும், இம் மாபெரும் குணம் நம்மிடம் இருப்பதை இங்கு கவர்னராக இருக்கும் பிரகாசாவே, பல தடவைகள் எடுத்துச் சொல்லியிருக்கிருர். அந்த மாபெரும் பண்பு இல்லையென்ருல் மார்வாடிகளும், குஜராத்திகளும், டால்மியாக்களும், கோயங்காக்களும், தமிழகத்தைத் தமது களிநடனக் காடாகக் கருதி வாழ முடியுமா?

'இதுதான் டில்லி' என்கிருர், கட்டுரையாளர். அவர், இவ்வண்ணம் தீட்டும் அதே கிழமையில், இதோ செய்தி படிக்கிருேம்; நன்செய் நாடாம் திருவாரூருக்கருகில்

அமைக்கப்பட்டிருக்கும் சர்க்கரை ஆலை ஒன்றின், நிர்வாகிகளில் ஒருவராக இடம் அளிக்கப்பெற்றிருக்கிறார், கோயங்கா.

கோயங்கா, இங்கே குறுநில மன்னராகப் பவனிவருகிறார்! தேர்தலுக்கு நிற்கவும், நமது காமராஜர்கள் வசதிசெய்து தருகிறார்கள். ஆனால், அதே சமயத்தில் இங்கிருக்கிற ஒரு வாசன், பம்பாயில் போய் படம் ஒட்ட வேண்டுமென்றால், பம்பாய் அரசே எதிர்க்க முன்வருகிறது. விபரத்தைத் தோழர்கள், அறிவர்.

டில்லி, தன்னுடைய ஆதிக்கம் செல்லுபடியாவதற்காக அடிக்கடி ஏக இந்தியா ராகத்தை ஆலாபனம் செய்கிறது. ஆனால், வடநாட்டில் வாழும் மக்களுக்கும் சரி, அரசுகளுக்கும் சரி, தென்னாட்டார் என்றால், ஏளனமும் 'ஏனோதானோக்கள்' என்கிற எண்ணமும் தான் அதிகம்.

தென்னாட்டில் வதியும் வேதரத்னங்கள், வடநாட்டு இந்திக்காக, எத்தனையோ இடங்களில் இந்தி வித்யாலயங்களை வைத்து நடத்துகிறார்கள். இவர்கள் செலவில், வடநாட்டுத் தலைவர்களை அழைத்துவந்து, விமரிசையாக விழாக்கள் நடாத்தி, நம்மை இறுமாந்து நோக்குவதில் இன்பம் அடைகிறார்கள்!

ஆனால், டில்லி போன்ற பட்டணங்களில் வதியும் தென்னாட்டாருக்கு ஒரு பள்ளிக்கூடம் தேவைப்படுகிறதென்றால், அங்கேயுள்ளவர்களா கட்டித் தருகிறார்கள். அல்ல, அல்ல. அப்படியிருந்திருந்தால், தமிழ்ப் பிள்ளைகளின் பள்ளிக்கூடம் கட்டுவதற்கெனக் காமராஜர் சர்க்கார் இலட்சக் கணக்கான ரூபாய்களை செலவழிக்கும்படி ஏற்படுமா? சில திங்களுக்கு முன்பு வந்த சேதி, உங்களுக்குக் கவனமிருக்கலாம். டில்லியிலே, நம்மவர்களுக்கோர் பள்ளி! கட்டப் பணம் உதவியது, டில்லி அல்ல, சென்னை சர்க்கார்.

“ஏடா, போடா” என்று உதைக்க உதைக்க அவள் காலுக்கு முத்தம்கொடுத்து, “மோகனாங்கி, நீயே! என் ஆசைக் கரசி” என்று பாடுவது, நெறிகெட்டவனுக்குச் சகஜமாயிருக்கலாம். ஆனால், நிலவளமும் நீர்வளமும் நிரம்பி அதைவிட பொருள் வளமும் மனவளமும் அதிகம் பெற்ற நமக்கோ, நன்று?

இலட்சக்கணக்கான கூட்டங்களில் கேட்டிருக்கிறோம் நாம், “டில்லியோடு சேர்ந்து வாழ்வதால் இன்னின்ன தீமைகள் இருக்கின்றன என்று திராவிட நாடு கேட்கும் நாங்கள் பட்டியல் தருகிறோம். ஏக இந்தியா வேண்டுமென விரும்புவோர், அப்படிச் சேர்ந்திருப்பதால் இன்னின்ன நன்மைகள் இருக்கின்றன என்று விரல்விட்டு எண்ணமுடியுமா?” என்பதாக. யாரேனும் முன்வந்தனரோ! வழக்கம்போல ராக ஆலாபனம் செய்வரே அன்றி, வாதாட வந்தாருண்டோ இதுவரையில்?

நாம் அவ்வண்ணம் கேட்கும் போது, எதிர்த்தோர்கூட இப்போதெல்லாம் முகத்தைச் சுளித்துக் கொள்வதையும் முணுமுணுப்பதையும் காணாமலில்லை. இந்த வார ‘கல்கி’ இதழின் தலையங்கத்தார் எழுதுகிறார், “மொத்தத்தில் அதிகாரம் முழுதும் தில்லியை நோக்கியே சென்று வருகிறது” என்பதாக. மொத்தத்தில் அதிகாரம் யாவும் தில்லிக்கே செல்கிறதாம். இதுபோல, கல்கியார் அடிக்கடி சலிப்பைக் கொட்டுகிறார்! அதிகாரம் யாவும் என்றால் மாகாண சர்க்கார்களின் அதிகாரங்கள்தான். அவைகள், வரவர, டில்லியாரின் கைக்கே போவதாகக் கூறப்படுகிறது.

முன்பே, மாகாணங்களுக்கென இருக்கும் அதிகாரங்கள் கொஞ்சம். “சென்னை சர்க்கார் என்பது ஒரு பெரிய முனிசிபாலிடியைப் போலவே ஒழிய, வேறென்ன?” என்று அறிஞர்கள் பலர், தெரிவித்துள்ளார்கள். அந்தளவுக்குத்தான், மாகாணங்களை வைத்திருக்கிறது, டில்லி. ஆனால் பெயர்மட் பெரிய பெயர், ‘ராஜ்யம்’ என்பதாக! இப்போது, அந்த அற்பசொற்ப அதிகாரங்களும் டில்லிக்கே போகிறதாம்-ஆச்சாரியாரின் குரல் ஒலிக்கிறது இப்படி!

மேல்பூச்சாக வாதாடுபவர்களும், நேரு பண்டிதரை நெஞ்சத்திலிருத்திக்கொண்டிருப்பதால் நிலைமைகளை உணர விரும்பாதவர்களும் வேண்டுமானால் இதை மறுக்கலாமே ஒழிய, வரவர டில்லியின் ஆதிக்கம் அதிகமாகிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

கடந்த 4ந் தேதி டில்லியில் நடைபெற்ற கவர்னர்களுடைய மாநாட்டில் உள்நாட்டு அமைச்சராம் பண்டித பந்த் என்பார் பேசுகையில் அறிவித்திருக்கிறார், “மாகாண கவர்னர்களுடைய அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. இப்போது இருப்பதைவிட மாநில மந்திரிகளுடன் கவர்னரின் உறவை வரையறுக்கவும் தகராறுகள் எழாமலிருக்கவுமான ஏற்பாடுகளைச் செய்யப்போகிறோம் நாங்கள். இப்போது வெளியாகியிருக்கும் ராஜ்ய புனரமைப்பு விஷயத்தில், கவர்னர்களுக்கென சில விசேஷ அதிகாரங்களையும் அளிக்கவிருக்கிறோம்”

கவர்னர்களுக்கு விசேஷ அதிகாரங்கள் சிலதை அளிக்க இருக்கிறார்களாம். விசேஷ அதிகாரங்கள் என்றால், எதுவாயிருக்கும்? டில்லியின் கட்டளைப்படி நடக்கும்படி மாகாண மந்திரி சபைகளை வற்புறுத்தும் அதிகாரங்களைத் தவிர வேறெதை டில்லி அளிக்க முடியும்!

ஒரு சட்டசபை, ஒரு மந்திரிசபை முதலியவை இருக்கும்போது அவைகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கென்று வெள்ளையன் ஆட்சியில் கவர்னர்கள் இருந்தார்கள். அவர்களைக் காங்கிரஸ்காரர்கள், கண்டித்தும் பேசினார்கள். தமது சுதந்திரத்தில் தலையிடுபவர்கள் என்றும் கருதப்பட்டது. இன்றும், அதே நிலைதான்! ஆனால், அகில இந்தியத்தை நினைத்துச் சகித்துக்கொள்ளுகிறார்கள், நம்ம மந்திரிமார்கள்!!

இருக்கிற அதிகாரமும் போகிறது.

எங்கு போனாலும், அவதிப்படவும் நேருகிறது.

இந்த இலட்சணத்தில், தனிநாடு அமைக்கவேண்டுமென்று சொன்னால் நம்மீது எரிச்சலும் கோபமும் கொள்ளுகிறார்கள். எவ்வளவுதான் ஆடினாலும் பாடினாலும் ஆரத்தழுவிக் குலவினாலும், வடக்கு வடக்காகத்தான் இருக்கும்! தெற்கு, தெற்காகத்தான் இருக்கும்! அதனை மறந்துவிட்டு, அகில இந்தியா பேசுவதால், பயன் பெற்றுவிடமுடியாது. மக்களின் மனோபாவங்கள் மாறுவது, அவ்வளவு சுலபமல்ல. ஒரே ஒற்றுமையாகக் கூறப்பட்ட ரஷ்யாவிலேகூட தங்கள் மாகாணத்தைச் சேர்ந்தவரான ஸ்டாலினைக் குறைகூறினார்கள் என்பதற்காக ஜார்ஜியா மக்களுக்கு கோபமும் ஆத்திரமும் உருவாகிற உணர்ச்சி எழுகிறதாமே! இதைவிட வேறென்னவேண்டும், ஒவ்வொருவருக்கும் தன் தன் இடப்பற்று இருக்குமென்பதை விளக்க!

பேதைமை

[டாக்டர். கி. தசரதன்]

"...மொழியில் மசோதாக்களையும் சட்டங்களையும் அச்சிடுவதற்காக 'மானோடைப்' அச்சு சாதனங்களை வாங்க சென்னை அரசாங்கம் பணம ஒதுக்கியுள்ளது. இதற்கான மொத்த செலவு சுமார் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது"

புரிகின்றதா சேதி? ஆங்கிலேயனை அனுப்பிய பிறகு அவன் மொழியையும் அனுப்பிவிட வேண்டும் என்று பலவகைகளில் நமது அரசாங்கம் பெருமுயற்சி எடுக்கின்றதல்லவா? அம்முயற்சிகளில் இதுவும் ஒன்று. ஆங்கிலத்தில் மசோதாக்களையும் சட்டங்களையும் அச்சிடுவதுடன் நில்லாது வேறு ஒரு மொழியிலும் இனிமேல் அச்சிடப் போகிறார்களாம்! மகிழ்ச்சிக்குரிய சேதிதான் என்று நினைப்பீர்கள் இந்தத் தொகை தமிழ் மொழிக்குத்தான் என்று எண்ணி. நீங்கள் மட்டும் என்ன, தமிழ் நாட்டில் தமிழன் ஆட்சி நடக்கின்றது என எண்ணுகின்ற எல்லோரும், அதுவும் நிதியமைச்சர் தமிழே பல்கலைக்கழக மொழியாக வேண்டும் என்று கூறுகின்ற நிலையில் இத்தொகை நிச்சயமாக 'என்றுமுள தென் தமிழ்'மொழிக்கு என்றுதான் எண்ணுவர்; இன்பம் திளைப்பர்.

ஆனால் எல்லோரும் நினைப்பது போல், விரும்புவது போல் இத்தொகை தமிழ் மொழியில் அச்சு வசதிகளைப் பெருக்கச் செலவிடப்படவில்லை. இந்திக்கு!!

இது வெறும் செய்தியாகமட்டும் இராமல் நமது நிலையை எண்ணிப் பார்க்கவும் தூண்டுகின்றது. தமிழ் நாட்டில், பெரும்பாலான மக்கள் பேசும் மொழியும், படித்து அறியும் மொழியும் தமிழாக இருக்கின்றது. ஆளுகின்ற அமைச்சர் பெரு மக்களில் பெரும்பாலோர் தமிழராகவும் இருக்கின்றனர். இந்நிலையில் நம் அமைச்சர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வழி கோலுகின்ற முயற்சிகளில் ஈடுபட்டுச் செயலாற்றலே முறையும் நெறியுமாகும் எனக் கூறுவர்.

ஆனால் நமது மாநில அமைச்சர்களோ எங்கோ ஓரிரண்டு கூட்டங்களில் தமிழ்பற்றிப் பேசிவிட்டால் தமிழ்த் தொண்டு செய்துவிட்டதாகிவிடுகின்றது என எண்ணுகின்றனர் போல் தெரிகின்றது. தமிழ் உண்மையில் நன்முறையில் வளர வேண்டுமாயின், மன்றங்களிலே இயங்கி வருவதோடு ஆட்சி மொழியாகவும் மாறுதல் வேண்டும் எம்மொழி ஆட்சிமொழி ஆகின்றதோ அம்மொழிக்குத்தான் மக்களிடை செல்வாக்குத் தோன்றி, அது வேகமாக வளர இயலும்; மொழியிலும் முன்னேற்றம் ஏற்படும். பொதுமக்களுக்கும் நன்மை விளையும். இத்துறையில் நமது அமைச்சர்களின் சிந்தனை சென்றதாகவே தோன்றவில்லை.

எட்டு ஆண்டுகளுக்கு முன் முயன்று பார்க்கும் சிறு முயற்சியாகத் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழை ஆட்சிமொழி ஆக்கிப் பார்த்தார்கள். இன்றளவும் அதில் எவ்வகையான முன்னேற்றமும் காண இயலாமல் திட்டம்'பரீட்சார்த்தமாகவே'இருக்கின்றது என்று கூறுகின்றனர். தமிழ் மொழிக்குத் தேவைப்படும் 'டைப்' சாதனங்களை வாங்கியதாகவோ, வாங்க முயன்றதாகவோ எவ்வகைச் செய்தியும் காணோம்.

தமிழ் ஆட்சிமொழி ஆகவேண்டும் என்று சொன்னார்கள் திருச்சியில் முயன்றோம்; வெற்றியில்லை..., என்று யாரோ அயலவர்கள் கூறுவது போல் நமது 'தமிழ்' அமைச்சர்கள் கூறுகின்றனரே தவிர இவர்களுக்கும் அதில்பற்றோ அல்லது அக்கரையோ இருப்பதாகக் காட்டவில்லை. இந்நிலை நீடித்து இருக்குமாகில் நிச்சயம் தமிழ் மொழியின் அழிவுக்குத்தான் வழிகோலி விடும்.

நமது அமைச்சர்கள், செய்யும் செயல்களை எண்ணுகின்ற போது ஒரு நல்ல திருக்குறள் நினைவிற்கு வருகின்றது.

அறிவும் பண்பும் இல்லான் ஒருவனுக்குப் பெரும் செல்வம் வந்து வாய்த்து விடின் அவன் எவ்வகையில் செலவு செய்வது என்று அறியாது மனம் போனபடி எல்லாம் வாரி இறைப்பது உண்டு. அவ்வாறு வாரி இறைக்கையில் அச்செல்வம் தனக்கு நன்மை செய்தாரைச் சேராமல் அயலவரைச் சேருவதும் உண்டு.

தனக்கு நன்மைசெய்யாத அயலவருக்குத் தான் ஏதும் செய்யக் கூடாது என்பதல்ல. தனக்கு ஒன்று நன்று செய்தார் இருக்க அவருக்கு ஏதும் கைமாறு செய்யாது பிறிதொருவருக்கு ஏதும் தொடர்பிலார்க்கு—நன்மை செய்தல் முறையும் அன்று. இதனைத் தான்,

> ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
> பெருஞ்செல்வம் உற்றக் கடை

என வள்ளுவர் குறிப்பிட்டார்.

தமர்—சுற்றத்தார்—பசிக்கையில், ஏதிலார்—ஏதும் தொடர்பிலா அயலவர்—பசிப்பர் பேதைபெருஞ் செல்வம் அடைந்த போது என்கின்றார்.

அறிவைப் பயன்படுத்த வகையிலானையே பேதைஎன்பர். அயலவரை நேசித்தல்—ஓம்புதல்—கூடாது என்பதல்ல; ஆனால் தன்னைப் பெற்றுப் பேணி வளர்த்து ஆளாக்கிவிட்ட தாய் பசியால் வாடுகின்ற போது அயலவரை அழைத்து விருந்துபசாரம் செய்பவனை அறிவுடையான் என்று யாரும் கூறார்; மாறாக அறிவிலான் என்பர். அவனைத்தான் வள்ளுவர் பேதை என்கிறார்.

தமிழ் மொழி அரசியல் செல்வாக்கு இழந்து வாடிநிற்கும் நிலையில் அயல்மொழி இந்திக்கு ஆக்கம் அளித்திடும் தமிழரை மொழிப் பேதையர் என்றுதான் சொல்ல வேண்டும். நமது மாநில அமைச்சர்களாகிய பேதையர் அதிகாரமும் ஆட்சி பீடமுமாகிய பெருஞ்செல்வம் உற்றக் கடை இந்திமொழியாகிய ஏதிலார் ஆர, தமிழ்மொழியாகிய தமர் பசித் திளைத்துக் காணப்படுகின்றனர். எனவே அவரைப் பேதையர் என்று எண்ணுவதில் நற்பொருத்தம் காணப்படுகின்றது.

ஆனால் நமது அமைச்சார் பெரு மக்களைப் பேதையர் என்று முற்றிலும் எண்ணிவிடவும் இயலவில்லை. தமிழ்மொழியின் வளர்ச்சியில் அக்கரை இருப்பதுபோல் சில நேரங்களில் பேசிக் காட்டுகின்றனர். பேதையருக்கு இருப்பதைவிட மிகுதியான அறிவுத் தெளிவும்பல நேரங்களில் பெற்றுத் திகழுகின்றனர். எனவே அவர் தமிழ்மொழியின்

(18-ம் பக்கம் பார்க்க)

அம்பில் அழைக்கிருர்

தம்பி!

மாற்ருர்கள் தோற்றத்தில் மிகப் பெரியவர்கள் என்றெண்ணி மருட்சி அடையாதீர்கள்.

அவர்கள் மிகப் பிரம்மாண்டமான உருவினராகத் தெரிவதற்குக் காரணம், நீங்கள் மண்டியிட்ட நிலையில் அவர்களைப் பார்ப்பதுதான்!

பவுஜாடே எனும் பிரன்ச்சு நாட்டுத தலைவருள் ஒருவர், இது போலக் கூறியுள்ளார். வெத்துவேட்டு வகையில் அமைந்த பேச்சல்ல, 'ஓஹோ' என்று வாழ்ந்தவர்கள், உலகப் புகழ்பெற்றவர்கள் களம் பல கண்டவர்கள், எனப்படும் நிலையினராகத் தலைவர்கள், பலர், தலைமுறை தலைமுறையாகக் கட்டிக்காத்து, தத்துவ அரண்களைத் தேடித் தேடி அமைத்துக் கொண்டு கட்சிகள் நடாத்தும் பிரான்சுநாட்டில், யார் இந்த அரசியல்வாதி? எப்போது கட்சி துவக்கினுர்? தத்துவம் யாது? பத்திரிகைகள் எத்தனை? என்று அலட்சியமும் ஏளனமும் கலந்த குரலில் பெரியவர்கள் கேட்டுக்கொண்டிருந்த நிலையில், சூருவளிபோலக் கிளம்பி, பொதுத் தேர்தலில் 52 இடங்களை வெற்றிகரமாகக் கைப்பற்றி, பிரன்ச்சு அரசியல் வட்டாரத்திலே 'புதிய பிரச்சினை'யாக உருவெடுத்துள்ள பவுஜாடேயின் பேச்சு இது. காரியமாற்றியவர் பேச்சு; கனவு காண்பவரின் கற்பனையுமல்ல, களமென்ருல் பன்னெடுங் காததூரம் ஓடிச்சென்று பதுங்குமிடம் தேடியவரின் வீம்புப் பேச்சுமல்ல, வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற வகையான வரட்டுப் பேச்சுமல்ல, நிலைமைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, அதற்கு ஏற்ற வண்ணம், நடவடிக்கையில் ஈடுபட்டு, அரசியலில் இன்றளவு வரையில், அலட்சியப்படுத்தப்பட முடியாததாகிவிட்டுள்ள தேர்தலில் வெற்றி கண்ட தலைவனின், அனுபவப் பேச்சு.

மாற்ருர்களின் தோற்றம்—என்று இங்கு குறிப்பிடப்படுவது, தனி ஆட்களின் உடற் தோற்றம் பற்றியதல்ல, அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளுக்கு உள்ள வசதி வாய்ப்பு, அதன் பயனுக அமையும் பண பலம படைபலம் இவை.

இம்முறையில், ஆளும்கட்சியாகிவிட்ட குழுவில் இடம பெற்றுள்ள எந்தத் தலைவரைப் பார்த்தாலும், பிற கட்சிக்காரர்களுக்கு, 'பிரம்மாண்டமான'வராகததான் தெரியும்; காரணம், அவர்கள் முன், நாம் கூனிக் குறுகி நிறகிரேும, மண்டியிட்டநிலையில் அவர்களைப் பார்க்கிரேும், அதனல் நமது கண்களுக்கு 'பிர்ம்மாண்டமாக'த தெரிகிருர்கள் எ்ன்று பவுஜாடே கூறுகிருர்.

அறிவகத்தில் ஒரு அரை மணி நேரம அமர்ந்திருநது. அங்கு அலுவல் புரிவோரின தொகை, அசசாகும் தாட்களின் அளவு, காணக்கிடக்கும வசதிகளின பஞ்சத்தன்மை, இவைகளைப் பார்த்து, பெருமூச்செறிநதுவிட்டு, மவுணட்ரோட 'இந்து' பததிரிகை நிலையத்துக்கு உளள கடடிடத்தைப பார்த்தாலபீதிகூட ஏறபடும—இந்த'இதழ்' தரும் ஆதரவினுல் வலிவு பெற்றுளள காஙகிரஸ் கட்சியை, நாம் எதிர்ப்பது முடிகிற காரியமா...... அரணமனைபோல் அல்லவா அலுவலகம இருக்கிறது—'இந்து' இதழுக்குத தேவைப்படும் காகிதக் குவியலை வைத்திடக்கூடப் போதுமானதாக இராதுபோலிருக்கிறதே 'அறிவகம்'. இதிலிருந்து கிளம்பும் எதிர்ப்பு அலை, இதைப் போன்ற பிரம்மாண்டமான 'கோட்டைகளை' துணையாகப் பெற்றுள்ள காங்கிரஸ்கட்சியை என்ன செய்துவிட முடியும்? என்ற அச்சமே உள்ளத்தில் புகுந்து குடையும். பவுஜாடே அந்த அச்சம்தான் கூடாது என்கிருர். நிமிர்ந்து நில்! உன் உருவத்தை நீயே குறுகலாக்கிக் கொள்ளாதே! மாற்ருன் முன் மண்டியிட்டுக் கிடக்காதே. அவன் ஒன்றும் உன்னைக் காட்டிலும் பிரம்மாண்டமானவனல்ல! என்று கூறுகிருர்.

நான், தம்பி! இந்தப் பேச்சினைக் கண்டபோது மிகமிக மகிழ்ச்சியடைந்தேன்—ஏனெனில் என்னைத்தான் உனக்கு நன்ருகத் தெரியுமே, எதிரிகள் பிரமாண்டமானவர்கள் என்ற ஏக்கம் அதிகமான அளவு கொண்டவனல்லவா; அதனுல் பவுஜாடே என்பவர் கூறிய பேச்சு, என்னையும் கொஞ்சம் நிமிர்ந்து நின்று, பார்க்கத் தூண்டிற்று; வேடிக்கை என்னவெனில், கூனிக் குறுக்கிடாமல், நிமிர்ந்து நின்று பார்க்கும் போது, அப்படி ஒன்றும் நமது மாற்ருர்கள் உண்மையிலேயே 'பிரம்மாண்ட'மானவர்களல்ல என்பது புரியத்தான் செய்கிறது!

நாம், வெளியே நின்றபடி அண்ணாந்த நிலையில் அவர்களையும் அவர்கட்கு



இவ்வளவு சாதித்தவர்கள் இனியும் வளர்ந்தால்...!

அமைந்துள்ள வசதிகளைகளையும் பார்த்துப் பீதி கொள்கிறோமே, அதேபோது, கோட்டை போல நிலையங்களைக் கட்டிக் கொண்டு, அதிலே கொலு மண்டபத்தார் போல் வீற்றிருந்து கோலோச்சுபவர்களாக உள்ளவர்கள், இத்தகைய எழிலும் ஏற்பாடும், வசதியும் வாய்ப்பும், அமைப்பும் இல்லாமல், எத்தனை பொலிவும் வலிவும் பெற்று, எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு இலட்சக் கணக்கான மக்களின் உள்ளத்தைத் தொட்டு உறவு பெற்று, உன்னதமான இடம் பெற்றிருக்கிறார்கள், பார்க்குமிடமெல்லாம் அவர்கள் பேச்சு! காணுமிடமெங்கும் அவர்களின் கொடிகள், பட்டி தொட்டிகளிலும் அவர்களின் பாசறைகள்! நாள் தவறுமல் அவர்களின் முழக்கம்! கல்வி நிலையங்களிலே அவர்களின் வாடை!! களியாட்டக் கொட்டகைகளெல்லாங்கூட அவர்களின் கருத்தோட்டம்!! எங்கும்அவர்கள்! எதிலும் அவர்களின் கைவண்ணம்! எப்படி முடிகிறது இவ்வளவு சாதிக்க! நமக்கு உள்ளவசதிகளில் ஆயிரத்திலொன்று உண்டா அவர்கட்கு! இலட்சக் கணக்கில் அச்சிட்டு வெளியே தள்ளும் இதழ்கள் எத்துணை, அவைகளுக்கு இலண்டனிலும் நியூயார்க்கிலும் கிளைகள், எல்லா நாடுகளிலும் நிருபர்கள், எந்த நிகழ்ச்சி குறித்தும் அழகழகான படங்கள், வண்ணம் கண்ணைப் பறிக்கும் அளவு தருகிறார்கள் இதழாளிகள்—இந்தப் பயல்களோ, உள்ளங்கை அளவு பத்திரிகை, அதிலே செங்கல் அடுக்கியதுபோன்ற எழுத்துக் கோர்வை, அழகு இல்லை, தனி நிருபர் தரும் அலங்காரக் கட்டுரை இல்லை, விளம்பரம் கிடையாது, விமரிசனம் காணோம், வீரத் திராவிடனே! விழித்தெழு! வீறு கொண்டெழு, விடுதலைக்குப் போரிடு! என்று எழுதுகிறார்கள், இதைக்கொண்டு மட்டுமே, இவர்களால், உறங்கிக் கிடந்த மக்களை விழிப்புறச்செய்ய முடிகிறது! நமக்கென்ன என்றிருந்த மக்களை அக்கரை காட்டச் செய்ய முடிகிறது—கூப்பியகரம், குனிந்து கிடக்கும் நிலை, கண்ணீர் சிந்திடும் போக்கு, எல்லாம் மாறி, கண்களிலே ஓர் வீரக்கனல் பேச்சிலே, ஓர் புது முறுக்கு, நடையிலே ஓர் புதிய எழில் கொள்ளும்படி அல்லவா செய்துவிட்டார்கள்—மொத்தமாக ஒரு பத்தாயிரம் ரூபாய் செலவழித்து ஏதேனும் ஒரு காரியம் செய்யக் கூடியவர்களா? இல்லையே. எனினும், மூலை முடுக்குகளிலும் முச்சந்திகளிலும், சாலை சோலைகளிலும், வாவி வயல்களிலும், ஆலைகளிலும், அலுவலகங்களிலும், சந்தைச் சதுக்கத்திலும்

> வாழ்க! வாழ்கவே!
> வளமார் எமது
> திராவிட நாடு
> வாழ்க! வாழ்கவே!

என்ற பண் எழச் செய்துவிட்டார்களே! எப்படி முடிகிறது இவர்களால்!

கோட்டையில் நமது கொடிமரம், கோலோச்சும் அனைவரும் நம்மவர், கடலிற் செல்லும் கலமும், காற்றுடன் போட்டியிடும் விமானமும் நமது கொடியினைத் தாங்கிச் செல்கின்றன; உலகநாடுகள் ஒவ்வொன்றும், நம்மிடம்தான் உறவுகொண்டாடுகின்றன. நம்மிடம்

> ஆசை கொண்டேன்
> உந்தன்மேலே!
> மோசம் நான்
> செய்யமாட்டேன்!

என்று கீதம் பாடி நிற்கிறார்கள், கோடீஸ்வரர்கள்; இங்கிலை பெற்றிருக்கிறோம், இவ்வளவு 'பிரம்மாண்டமாக' வளர்ந்துவிட்டிருக்கிறோம், இந்தப் 'பொடியன்கள்' ஒரு வசதியுமற்ற வாய்வீச்சுக்காரர்கள், வரண்ட தலையர்கள், நம்மிடமிருந்து மக்களைப் பிரித்து நெடுந்தூரம் கொண்டுசென்றிட முடிகிறதே, எப்படி? எப்படி? என்றுதான் எண்ணி எண்ணி ஏக்கமுறுகிறார்கள். பவுஜாடே இப்போது சொன்னார்; நமமில் பலர் ஏற்கனவே, மாற்றார்களின் பிரம்மாண்டமான உருவம் வெறும் மனமயக்கந்தான் என்று தெரிந்துகொண்டிருக்கிறோம், எனவேதான், கூனிக் குறுகி நின்று பீதி கொள்ளாமல், நிமிர்ந்து நின்று, அவர்களை நேருக்குநேர் பார்த்தோம்—நம்மைக் கண்டு அவர்கட்கு இதுபோது அச்சம் பிறக்கிறது—அருவருப்புக் கலந்த அச்சம்! இந்தப் பஞ்சைகளால் இவ்வளவு சாதித்திட முடிகிறதே, என்ற அருவருப்பு—இவ்வளவு சாதித்தவர்கள், இனியும் வளர்ந்தால் என்று எண்ணும் போது ஒருவகையான அச்சம்!

காரணம் என்ன தெரியுமா தம்பி! இங்கு நானே மற்றவர்களோ, பவுஜாடே சொன்னது போல, மாற்றார்கள் ஒன்றும் பிரம்மாண்டமானவர்களல்ல என்று சொன்னதில்லை, எனினும், நீயும் நானும் காணும் இன்பத் திராவிடம், எழிற்பேருருவமாக நமது மனத்திரையில் இருக்கிறதல்லவா, அதைக் காணும்போது, எவ்வளவு பிரம்மாண்டமான தலைவரும், நம்மை மிரட்டிடும் அளவுக்குப் பெரியவராகத் தெரிவதில்லை!

நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று பார்க்கிறோம், காட்சி நம்மைக் கவிஞனுக்குகிறது, தோளைத் தொட்டு அவ்வேளையில் ஒருவன், மூலைக் குழாயில் தண்ணீர் வெகு வேகமாக வருகிறது, விந்தையான காட்சி அது என்று சொன்னால், நாம் குறுநகை புரிந்தபடி, "ஏடா, மூடா! மூலைக் குழாயில் வேகமாக வரும் தண்ணீரிலா விந்தைக் காட்சி காணுகிறாய், இதோ பார் எதிரே, கடலே! கடலே! விரிந்து பரந்து வியந்திடச் செய்யும் நீலக் கடலே! ஓயாது ஒலிசெய்து ஞாலத்துக்குத் தாலாட்டளிக்கும் அற்புதக் கடலே!—என்று பாடிடத் தோன்றுகிறது, எழிலும் அளவும், இயல்பும் உள்ளத்தை வேறு எதனிடமும் செல்லவிடாமற் செய்கிறது, இதைக் கண்டும், கருத்தற்றவனே! மூலைக் குழாயின் தண்ணீர் வேகத்தை வியந்து பேசி நிற்கிறாயே—என்றுதானே கேட்போம்.

அப்படித்தான் கேட்டோம் நாட்டினரைப் பார்த்து, "நாட்டினரே! நாட்டினரே! உடன் பிறந்தோரே! எதை எதையோ கண்டு சொக்கி நிற்கிறீரே, சோர்ந்து போகிறீரே! அவருடைய கெம்பீரம் தெரியுமா? இவருடைய வீரதீரம் அறிவீர? அவர் உயரம் எவ்வளவு, உள்ள இடத்தின் உன்னதம் எத்தகையது! உலக நாடுகளிலே அவருக்கு எத்தகைய புகழ்! எவ்வளவு வரவேற்பு! மக்கள் உள்ளத்தில் குடியேறியவர், கோலைக் கீழே எறிந்து

தொடை நடுங்கிக் கூட்டத்தினர்!

விட்டு, அவர் தாளின் கீழ்க் குப்புறப் படுத்துத் தொழுதனர், கொற்றவர்கள். அவர் பாதம் பட்டால் போதும், பவமெலாம் ஒழியும், பவிசுகள் வந்து குவியும் என்று மாளிகைகள் பல தவங்கிடக்கின்றன! கரம் குலுக்கமாட்டாரா என்று கனதனவான்கள் காத்துக்கிடக்கின்றனர்; கடை காட்டமாட்டாரா என்று இடை நெளியும் இதழழகிகள் ஏங்கிக்கிடக்கின்றனர், கரம் அசைந்தால், ஆம்! ஆம்! என்று இலட்சக் கணக்கானோரின் சிரம் தாழ்ந்திடுகிறது! — இந் நிலையில், இவ்வளவு உயர் இடத்தில், பிரம்மாண்டமான உருவில் உள்ளாரே, காணும்போது உனக்குக் குலை நடுக்கமே எடுத்தாகவேண்டுமே, என்று சிலபலர் கூறுகின்றனர். எனினும், இவர்களின் எழிலையும் உயர் நிலையையும் கண்டு சொக்கிடு முன்பு, திராவிடரே! நமது தாயகத்தின் முன்னாள் நிலையையும், அந்நாளில் நம்மவர் பெற்றிருந்த ஏற்றத்தினையும், கொற்றம் இருந்த தன்மையையும், கோல் கெடாவண்ணம் மக்கள் விழிப்புணர்ச்சி காட்டிய பான்மையினையும், அறநெறி தந்த புலவர்தம் மாட்சியினையும், அந்த அறநெறி அவனியில் பரவித் தமிழ் சின்னத்தின் புகழைப் பரப்பிய பெருமையினையும சற்றே எண்ணிப் பார்த்திடுமின், சிந்தையில் செந்தேன் பாயும், விசை ஒடிந்த தேகத்தில் வன்மை சேரும், கூனியஉடலே நிமிர்ந்திடும், கண்களில் நீர்துளிர்க்கும், எத்துணை புகழ்ச்சியில் இருந்தனர் நம்மவர் என்பது புரியும், அந்த மாமலை முன்பு இன்று நாம் காண்பதெல்லாம் கடுகாகும்—இன்று காணக் கிடைக்கும் மாற்றாரின் காட்சியே மாட்சியுடையது என்ற எண்ணம், அன்று நமக்கென்று இருந்து, இடையில், இலாதொழிந்து, இன்று நெஞ்சத் திரையில், புகை உருவில் பதிந்துள்ள காட்சியின் மாட்சி பற்றி எண்ணினால்போதும் இருந்த இடம் தெரியாது போகும் —என்று எடுத்தியம்பினோம், ஏடுகளில் உள்ளனவற்றைக் கல்லி எடுத்து, கறைநீக்கிக் காட்டினோம், இன்று மக்கள் மன்றம் கல்சுமந்த கனகவிசயனையும் காண்கிறது, கடாரம் வென்ற தமிழ் மகனை அறிகிறது, சிங்களத் தீவினிலே போரிற் தோற்றவர்களைக்கொண்டு கட்டப்பட்டதாம் கல்லணை; தமிழனின் புகழ்க்கம்பம் பர்மாவில் நாட்டப்பட்டதாம் முன்னர்; யவனம் அறியுமாம் நமது புகழை, அந்நாட்டு நாரீமணிகளின் அழகுக்குத் துணை நின்று குலுங்கினவாம் நமது கடலில் கிடைத்த முத்துக்கள், சீனம் அழைத்ததாம் நம் நாட்டுச் சீலர்களை, ஆகா! தம்பி! உள்ளமெலாம் உவகை பொங்கும் உண்மைக் காதைகளை நமது மக்களிடம் கூறிவிட்டோம், செவியில் இந்தச் செந்தேன் வீழ்ந்து, சிந்தைக்குப் புது விருந்து கிடைத்தான பிறகு, இதழ் பல எழிலூட்டினாலும், கோடிகள் கோட்டைகளைக் கட்டித் தந்தாலும், கோல், துணிவு தந்திடினும், இவைகளைக் காட்டி, நம்மை மிரட்டிடவும் மயக்கிடவும் முனைவோரின் முன்னோர், கணவாயில் குதிரைகள் நுழையும் குளம்புச் சத்தம் கேட்டதும், பீதிகொண்டு பிடரியில் கால்பட ஓடி, பெண்டு போகட்டும், பிள்ளை போகட்டும், உயிர் மட்டும் தப்பினால் போதும் என்று, செங்கிஸ்கான், தைமூர், கோரி, கஜனி, அலாவுதீன், ஆகிய இரணகளச் சூரர்கள் காலத்திலெல்லாம், தோற்றோடிய, 'தொடை நடுங்கிக்' கூட்டத்தினரே என்பது புரிகிறபோது, பவுஜாடே எதற்கு, உன் மாற்றார்கள் பிரம்மாண்டமானவர்களல்ல என்று எடுத்துரைக்க! நாடு அதனை அறிந்துவிட்டது—நாம் கூறினோம் என்பதை எண்ணும்போது, நாம் கூறியது மக்களின் உள்ளத்திலே இடம்பெற்றுவிட்டது என்பதை உணரும்போது, நாம் மகத்தான வெற்றி பெற்றுவிட்டோம் என்று பெருமைப்பட நாம் தயங்குவானேன்! நாடு எத்துணை பெரியது, நானிலம் நம் நாட்டினை எத்தகைய உயர்வாகக் கருதிற்று என்பது விளங்கிவிட்ட பிறகு, பொய்க்கால் குதிரை ஏறி, காகிதக் கவசம் பூண்டு, கட்டைக் கத்தி ஏந்தி, தாளத்துக்குத் தக்கபடி 'போரிடும்' வீரர்பால், மதிப்பா பிறக்கும், மருட்சியா ஏற்படும்? சேரன் செங்குட்டுவனைப் பற்றிய 'சேதி'யைத் தெரிந்துகொண்டவர்களிடம், சேட்டுமார்கள் கட்டித்தந்த கோட்டையில் அமர்ந்துள்ளவர்களின்பிரம்மாண்ட உருவம் பீதியையா கிளப்பும்! எலி தோண்டும் வளையில், புலியா வீழ்ந்துபடும்! தந்தையர் நாடு தன்னிகரற்று வாழ்ந்த வரலாற்றினையும், மீண்டும் அந்நிலை எய்துதற்கான எல்லா வசதிகளும் உள்ளன என்ற நிலையினையும் தெரிந்துகொண்டவர்கள் கண்களுக்கு, இன்று ஏமாந்த நேரத்தில் ஏற்றம் கொண்டோரின் தோற்றம் மாதிகிலூட்டும்!"

"நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து" நின்று, தமது ஆட்சியின் பயனாக ஏற்பட்டுள்ள அமைதியையும், அந்த அமைதியால் விளைந்த வளத்தையும், வளம் உண்டு வாழும் மக்களுடைய மகிழ்வையும் கண்டு, கொற்றம் உடையோம், குறை ஏதும் தந்தோமில்லை, என்று மனதிலே எண்ணி மகிழ்வுறும் மன்னர்களல்லவா, தாயகத்தில் ஆண்டுவந்தனர் என்று நமக்கு இலக்கியம் கூறுகிறது—இன்றைய ஏடுகள் கூறுவது என்ன? வெள்ளமென்றும் வெந்தழல் என்றும், பஞ்சமென்றும் பட்டினி என்றும், குட்டமென்றும் காசமென்றும், குறை கூறித் திரியும் மக்கள், தேசத்துரோகிகள் — என்றல்லவா, நீதிநெறி விளக்கமளித்திடக் காண்கிறோம்! சிலம்பு ஒலித்த திருநாட்டிலே, இன்று, செய்வதென்னவென்று தெரியாதாரின் புலம்பலொலி அல்லவா கேட்கிறது! சீறும் புலியெனச் சிங்களத்தீவின் மீது படைஎடுத்துச்சென்ற இனத்தான், 'கள்ளத் தோணி' என்றல்லவா, ஏளனம் செய்யப்படுகிறான்? முத்தெடுத்து மூலைமுடுக்குகளில் உள்ள நாடுகளுக்கெல்லாம் அனுப்பிய தமிழன், இன்று பிச்சை எடுத்துப் பிழைக்க 'அனுமதி' கிடைக்கும் நாடு எது என்றல்லவா கேட்கிறான். ரோம்நாட்டு மாவீரர்களைக்கட்கமெடுத்து விளையாடியது போதும், கண்ணாளா! கனகப்பந்தளிக்கிறேன், விளையாடிட வாராய்!

வருந்துகிறோம்.

நடிக நண்பரும், திரைப்பட பாடலாசிரியருமான தோழர் கே. பி. காமாட்சிசுந்தரம் கடந்த கிழமை இயற்கை எய்திய செய்தி அறிய மிகவும் வருந்தினோம். அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும், நடிகத் தோழர்களுக்கும் நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நிலவுப்பயன் கொள்ளும் நெடுமுற்றம் காண்போம்

என்று அழைத்த, கண்டாரைக் கொல்லும் கட்டழகிகள் அந்தக் கவர்ச்சியினைப் பெற்றது, நந்தம் நாட்டினர் நெய்து அனுப்பிய பொன்னார் இழையும் துகிலும் என்று கவிவாணர் நமக்குக் கூற, இன்று கைத்தறியாளர் தம் கைக் குழந்தையை, கால்படி அரிசிக்கு விற்றிடும் கொடுமைக்கல்லவா ஆளாயினர்! கலம் கட்டினர் தமிழர் என்கிறது கல்வெட்டு: கல் உடைத்துப் பிழைக்க, கண்காணா நாடு செல்கின்றனரே அவர்தம் வழிவந்தோர். பிற்காலப் புலவர் கூட, "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே!" என்று பாடினார், இன்றோ, செந்தமிழ் நாடெனும் போதினிலே, நெஞ்சில் செந்தீயாய் வேகுது டில்லி செங்கோட்டையிலே என்றல்லவா, கதறவேண்டி இருக்கிறது..

நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றம் காண்போம், வருகிறாயா, தம்பி! வா, சிந்தனைச் சிறகணிந்து வா, செந்தமிழ் நாடு இருந்த நிலையைச் சற்றே கண்டு வரலாம், வா.

பாண்டிய மன்னன், அரண்மனை மேல் தளத்தில், அமைத்துள்ள நிலாமுற்றம்—இங்கு நின்றால், திங்களின் எழிலைப்பருகிடலாமல்லவா! என்ன தம்பி! வாய்பிளந்து நிற்கிறாய்? மேல் தளத்தில் அருவி ஏது? அருவி ஓசை கேட்கிறதே என்று ஆச்சரியப்படுகிறாய் — அருகே சென்று பார்த்திடலாம், வா! நீர் நிறைந்த நிலையமொன்று இருக்கிறது இந்த நிலா முற்றத்தில்— குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன அந்த நீரினைக் கொண்டு செல்ல, இதோ பார்த்தாயா, மீனின் வாய் வழி நீர் கொப்பளித்துக்கொண்டு கீழே விழுவதை! ஆமாம் தம்பி! குழாயை மீன் வடிவத்தில் அழகுற அமைத்துள்ளனர். அந்த நீர் வீழும் ஒலிதான் நீ கேட்டது. உற்றுக் கேள்......தெரிகிறதா..... மயில், தம்பி, புள்ளிக் கலாப மயில், அதன் அகவலும் கேட்கிறது. அரண்மனையின் எழிலை மேலும் காணலாம்; சுவர்கள் தான், தகடுகளல்ல! செம்பினால் செய்தாற்போல அமைந்துள்ளது, அரண்மனைச் சுவர். சுவரிலே பலவண்ணப் பூக்கள் குலுங்கும் கொடிகளைப் படரவிட்டனர் என்றுதானே எண்ணிக் கொண்டாய். தொலைவிலிருந்து பார்த்தால் அப்படித்தான் தோற்றமளிக்கும். ஆனால் அது ஓவியனின் கைவண்ணம்! வெள்ளி நிறச் சாந்து பூசி, அதிலே கொடியும் மலரும் தீட்டிவைத்திருக்கிறான்! போதும் காட்சி, விரைந்து சென்றுவிடுவோம், வா தம்பி, மன்னனின் கண்ணில்மட்டும் நாம் பட்டுவிடக்கூடாது, அகம் தெரியுமா, புறம் தெரியுமா என்றுகேட்டு விடுவான், அறியோமே என்று கூறிடின், தமிழனல்லவோ என்று கேட்டிடுவான், நமக்கேன் வம்பு, வா, வா, 'இந்திக்கு வந்தனை செய்திடுவோம், அதை ஏற்காதவர் மீது காய்ந்திடுவோம்' என்ற ஏற்றம் பெற்றுள்ள இன்றைய தமிழ் நாட்டுக்குச் சென்றிடுவோம்.

முடியாது, அண்ணா! முடியாது. ஜாதி முடை நாற்றமடித்துக் கொண்டு, தரித்திரத் தேள் கொட்டிக்கொண்டு கிடக்கும் அடிமைப் படுகுழியாகிவிட்டுள்ள தமிழகத்துக்கு நான் வரமாட்டேன், நான், இங்கேயே நிலவுப் பயன்கொள்ளும் நெடுவெண் முற்றத்திலேயே உலவப்போகிறேன் என்கிறாயா, தம்பி! வந்ததே வம்பு. எனக்குத் தெரியுமே உன் இயல்பு. உன்னிடம் திராவிடத்தைக் காட்டினால், இப்படித்தான் நீ பிடிவாதம் செய்வாய் என்று நான் பயந்தேன்—சரியாகி விட்டது. தம்பி! காலத்தின் தாக்குதலாலும், கயவரின் சதியாலும், நமது ஏமாந்த தன்மையாலும் தகர்க்கப்பட்டுப்போயுள்ள அந்த முற்றத்தையும் கொற்றத்தையுமே எண்ணி எண்ணி ஏங்கி என்ன பயன்? உண்மை, உன்னையும் என்னையும், பிடித்திழுத்து வந்து, பேதமும் பீடையும், அடிமைத்தனமும் அறிவீனமும், கொடுமையும் பிறவும் நெளியும் இன்றைய நாட்டிலே கொண்டுவந்துதானேவிடும்; எப்படித் தப்புவது; தவிர்க்கமுடியாததாயிற்றே.

ஆயினும், அண்ணா! அந்தக் காட்சியை...தன்னாட்சியின் உயர்வினை, எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும்..................என்று பேசி, என்னை உருக வைக்கிறாய்; நான் என்ன செய்வேன் தம்பி, நாம் இழந்தஇன்பம் மகத்தானதுதான், பிற எந்நாட்டவரும் பெற்றிராத எழிலைத்தான் பெற்றிருந்தோம், இழந்துவிட்டோம், மீண்டும் அதைக் காணலாம், என்கிறாயா? காண்பது கடினம்—ஆனால், இயலாதது அல்ல!! அதற்காகவே, கற்பனைச் சிறகணிந்தது போதும், கண்ணீர் மலிந்த திராவிடம் செல்வோம், வா, என்று அழைக்கிறேன். சென்று, மேலும் கூறுவோம், மேதினி போற்றிட மேலான நிலையிலிருந்த நந்தம் நாடு, இன்றுள்ள சீர்கெட்ட நிலையினை—கூறி, திருந்தாத மனத்தினரையும் திருத்தி நம்பால் அவர்களையும் சேர்த்துக் கொண்டு, இன்பத் திராவிடம் காண்பதற்கான, பணியில் ஈடுபடுவோம். கன்னியை எண்ணிக் கொண்டு உதட்டைக் குவித்துச் சத்தம் செய்தால், முத்தத்தின் சுவையா கிட்டும்!! இன்பத் திராவிடத்தை ஏடுகள்மூலம் மட்டுமே கண்டு, திருப்திகொள்ள முடியுமா! இழந்ததைப் பெற வேண்டும், இன்பத் திராவிடத்தைக் காண வேண்டும்.

முடியும்—முடியும் என்று எண்ணுவோரின் தொகையையும் வகையையும், அவர்தம் உறுதியையும் உற்சாகத்தையும், அவர்தம் உள்ளத்தில் பொங்கி, கண்வழி வழியும் பேரார்வத்தையும், காட்டுகிறேன், வாரீர், என்று அழைக்கிறார், அம்பில்!!

இலட்சக் கணக்கில் கூடப் போகிறார்கள்—இலட்சிய முழக்கம் கேட்கப்போகிறது.

சிங்களத் தீவிலிருந்தும் திருநெல்வேலிச் சீமையிலிருந்தும், சிங்காரச் சென்னையிலிருந்தும் பிற மாவட்டம் பலவற்றிலுமிருந்தும், அடலேறுகளும், அவர்கட்கு காதற்தேனில் வீரத்தைக் குழைத்தளிக்கும் குமரிகளும், வீரரைப் பெற்றெடுத்த தாய்மார்களும் அவர்தம் இளமை வளத்தை எண்ணிக் களித்திடும் முதியோரும், வரலாறு அறிந்த மாணவர்களும், புதிய வரலாறு காணும் பாட்டாளித் தோழர்களும் அணி அணியாக வரப்போகிறார்கள், கடலலையை மிஞ்சும் களிப்பொலி எழுப்பியபடி, குடும்பம் குடும்பமாக வரப்போகிறார்கள்— குதூகலம்

காணவாரீர்! கடமையை உணர வாரீர்!

காணப்போகிறார்கள். குன்றெடுக்கும் நெடுந்தோளையும், குளிர்மதிப் பார்வையையும், இன்று கண்டோம், இனிவென்றோம், என்று எவரும் ஆர்வத்துடன் கூறிடத்தக்க முறையில் திரண்டு வருகிறார்கள், திரு இடத்தவர்! காண வாரீர்! கடமையை உணர வாரீர்! கருத்தளிக்கவும் காரியமாற்றவும், கலங்கா உள்ளம் படைத்தோரே! திரண்டு வாரீர்! தீரரும் வீரரும், திரு இடமீட்புக்கு எத்துணை எழுச்சியுடன் அணி வகுத்து நிற்கின்றனர் என்பதை எவரும் அறியத்தக்க விதத்தில் வந்து சேருமின்!! தாயகம் அழைக்கிறது! தளை உடைபடும் வேளை எது எனக்கேட்டு, அழைக்கிறது. பெற்றேனே, இத்தகைய மக்களை, மாற்றான் எனை ஏச, கூசாது கேட்டுக் குனிந்த தலையுடன் கிடந்தனரே, என்றால் சீராட்டி வளர்க்கப்பட்ட இந்த மக்கள், என்று கூறிக் கதறிக் கொண்டிருந்த தாயகம், இன்று, மக்களிடம் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியையும் வீரத்தையும் கண்டு, கண்ணீரைத்துடைத்துக் கொண்டு, "நான் பெற்ற செல்வங்களே! தீர்ந்ததடா என் துக்கம். இனி, என் தளைகளை உடைத்திடுவீர் என்ற நம்பிக்கை பிறந்ததடா!" என்று வாழ்த்தி வரவேற்கிறார். அன்னையின் பணிக்காக, அருமந்த மக்காள், அனைவரும் வருக!!... என்றெல்லாம் கூறி அழைக்கிறார், அம்பில் தர்மலிங்கம்.

தம்பி! அம்பில் அழைப்பிற்கிணங்க, நீயும் நானும், உடன்வர இசைவோரையும் அழைத்துக் கொண்டு சென்றால், உன் உள்ளத்தில் உவகைகொள்ளச் செய்யும் இன்பத் திராவிடத்தைப் பெறுவதற்கான, வழிவகைபற்றிக் கலந்து பேசவும், கருத்துக் காணவும், திட்டம் தீட்டவும், செயல்படவும் வாய்ப்பு ஏற்படும். அம்பில் அழைப்பதும் அதற்குத்தான்.

"நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றம்" காண விழைகிறாயல்லவா, தம்பி, அது தனியே கிடைத்துவிடாது, நமக்கென்று ஓர் அரசு அமைந்தால்மட்டுமே, அத்தகைய முற்றம் கிடைக்கும், மன்னர்கட்குமட்டுமே சொந்தமானதாக அல்ல, மக்களுக்குச் சொந்தமான முற்றம்.

மே, 17 18, 19, 20 ஆகிய நாட்களில், திருச்சியில் நடைபெறும் நமது மாநில மாநாடு, உன்னையும் என்னையும், உன்னதமான அறப்போர் வீரர்களாக ஆக்குவதற்கான பாடிவீடு என்று கூடச் சொல்லலாம். நம்மையெல்லாம் வரவேற்று உபசரித்திட வகைவகையான எண்ணங்களைக் குவித்துக் கொண்டிருக்கிறார், வரவேற்புத் தலைவர், அம்பில் தர்மலிங்கம். பொல்லாத மனிதர், என்னை எதிரில் வைத்துக்கொண்டே, சென்னையில் நடைபெற்ற மாநிலமாநாட்டைவிட, எங்கள் திருச்சி மாநாடு, பன்மடங்கு கவர்ச்சியுள்ளதாக, எழுச்சிமிக்கதாக, பயன்தரத்தக்கதாக அமையப்போகிறது என்று கூறுகிறார். நானும், அதை மறுப்பதற்கில்லை, உண்மையை மறைத்திடும் திறமையை நான் எங்கே பெற்றிருக்கிறேன்!

திருச்சியில், நிச்சயமாகச் சென்னையை மிஞ்சும் வகையில்தான் மாநாடு நடைபெறும்—ஐயமில்லை.

சென்னையிலிருந்து திருச்சிக்குப் பயணப்பட்டு வந்திருக்கிறோம்—முதல் மாநில மாநாட்டிலிருந்து இரண்டாவது மாநில மாநாட்டுக்கு—இடையே நாம் பெற்றுள்ள எழுச்சியும் பயிற்சியும் சாமான்யமா! எவ்வளவு வியர்வையும் குருதியும் கொட்டினோம். எத்துணைத் தொல்லைகளைத் தாங்கிக் கொண்டோம், எத்தகைய களமெலாம் கண்டோம்—இவை கிடக்கட்டும், எவ்வளவு இழிமொழியும் பழிச்சொல்லும் வீசி நம்மை மிருகமாக்க முயற்சித்தனர்!! மாலை மதியமும் உன் மலர்முகமும், காற்றினிலே கலந்துவரும் கீதமும் நம் கன்னல்மொழிக்குழவியின் யாழும், கண்ணே! என்னை எங்கெங்கே அழைத்துச் செல்கிறது தெரியுமா என்று அவன் கேட்க, இன்னுயிரே! எங்கு வேண்டுமாயினும் அழைத்துச் செல்லட்டும், இன்றொருவள் மனைக்கு மட்டும் சென்றீரோ, ஆமாம், இந்தப் பேசும் புரு பிறகு பாயும் புலியாக வேண்டியதுதான், என்று அவன் உள்ளத்துக்கரசி கூறிட, இன்புற்று இருக்க வேண்டிய பருவத்தினரெல்லாம், நமது கழகக் கட்டளையை ஏற்று, கடும் சிறை புகுந்து, கஞ்சிக் கலயம் தரும் காவலாட்களின் உரை கேட்டு, உள்ளத்தில் ஓராயிரம் எண்ணங்கள் ஊற்றெடுக்க, பொறுமனமே பொறு! திரு இடத்தின் மீட்புப் பணியில் ஈடுபடும் போதும், காதற் சுவையையும் இழக்க வேண்டித்தான் வரும், என் செய்வது, என்று தமக்குத் தாமே ஆறுதல் கூறிக் கொண்டனர்.

எந்த நாட்டு விடுதலை வரலாற்றிலும், எழிலுள்ளது என்று கருதத்தகும் காரியம் பல ஆற்றியிருக்கிறோம். ஆணவத்தைச் சந்தித்திருக்கிறோம், ஆத்திரத்தை வரவிடாமல் தடுத்துமிருக்கிறோம். தூற்றலைக் கேட்டோம், நெஞ்சத்தினவுக்கு இடமளிக்க மறுத்துவிட்டோம். சதியும் பழியும் பகையை உமிழ்ந்தன — சட்டைசெய்யமறுத்துவிட்டோம். அடக்குமுறை அகோரப் பசியுடன் வந்தது, இரை கொடுத்தோம்! இன்னுயிரையே ஈந்தனர் வீரர் சிலர்! கரம் இழந்தோர், காலிழந்தோர் உளர்! எவரும் நெஞ்சுரம் இழந்தாரில்லை! நேர்மையை இழந்தாரில்லை!

சென்னையிலிருந்து திருச்சிக்கு வருகிறபோது இவ்வளவு கண்டிருக்கிறோம் எனில், அம்பில் கூறுவதுபோல, திருச்சி ஏன் சென்னையை மிஞ்சாது! நிச்சயமாக, எழிலும் பயனும் மிகுதியாகவே இருக்கும்.

இங்கு, தம்பி, உன் வேட்கை தணியுமளவுக்குக் கருத்து விருந்

வாழ்த்துகிறோம்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும் எம். ஜி. ஆர். நாடக மன்றத்தின் நிர்வாகியும் நமது முன்னேற்றக் கழகத் தோழருமான ஆர். எம். வீரப்பன் தோழியர் இராஜம்மாளை திருப்பரங்குன்றத்தில் 12—3—56 தோழர் அண்ணாதுரை தலைமையில் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். கலைவாணர் N. S. K. நடிப்புப்புலவர் K. R. ராமசாமி, M. G. சக்கரபாணி, புரட்சி நடிகர் M. G. ராமச்சந்திரன், S. S. ராஜேந்திரன், கலைமணிகளும் நமதியக்க நண்பர்களும் ஏராளமாக வந்திருந்து திருமணத்தைச் சிறப்பித்தார்கள். மணமக்கள் எல்லா இன்பமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

சென்னைக்கும் திருச்சிக்கும் இடையில்!

முகப்பில்......

அமெரிக்காவிலுள்ள அலபாமா மாகாணத்தில் நிறவெறியை எதிர்த்துப் போராடும் ஆதரின் லூசி, கருப்பு நிறத்தவருக்கு இடமளிக்கப்படுவதில்லை என்று அலபாமா பல்கலைக்கழகத்தினர் 125 ஆண்டுகளாகக் கொண்டிருந்த முடிவை மாற்றினாள். நிறவெறியை ஆதரிப்பது தவறு என்று அமெரிக்க உயர் நீதி மன்றம் கூட உத்தரவிட்டுள்ளது. உரிமைக்கு போராடும் வீராங்கனை இந்த ஆதரின் லூசி.

தளிக்கப் பல திட்டங்களைத் தீட்டிய வண்ணம் உள்ளனர், வரவேற்புக் குழுவினைச் சேர்ந்தவர்கள்.

இடமும் கிடைத்துவிட்டது — மாநாட்டுக்கு!

இதிலென்ன, அண்ணா! பெருமிதம், என்று கேட்பாய், தம்பி, ஏனெனில், நீ, திரு இடம் நமதாயிற்றே, இங்கு மாநாட்டுக்கா ஒரு இடம் கிடைப்பது அரிது, என்று கேட்பாய்! ஆனால், இடம்பெறப் பட்டபாடு கொஞ்சமல்ல.

வயலாக இருந்தால், மழை வந்துற்றால், என்ன ஆகும் என்ற பயம் வருகிறது — வெட்ட வெளியாக இருந்தாலும் பரவாயில்லை, ஆனால் நகரைவிட்டு நெடுந்தொலைவில் இருந்தால் தொல்லைமிகுமே என்று அச்சமும் கவலையும் குடைகிறது.

பெரிய பெரிய திடல்கள் உள்ளன கல்லூரிகளிடம் — அவை அத்தனையும் நேரு துரைமகனுருக்கு மட்டுமே தருவது என்று 'சட்டம்' இருக்கிறது! என் செய்வது.

திருச்சியில், ஜல்லடைபோட்டு ஜலித்தாயிற்று — சலிப்பே வந்துவிட்டது.

கடைசியில், எங்காவது குக்கிராமமாகப் பார்த்துக்கொண்டு போய்விடுவது என்று முடிவுசெய்தோம்—அந்த வேளையில், கிடைத்தது, வயலாகவுமின்றி, ஊருக்கு நெடுந்தொலைவில் அமைந்ததாகவுமின்றி, திருச்சி ஜங்ஷனுக்கு பக்கத்திலேயே, ஒரு ஆறு பர்லாங்கு தொலைவிலே ஒரு பரந்தவெளி. பாடு அதிகம் இதைப் பெற, மேலும் அதிகமாகப் பாடுபட்டாக வேண்டும், அந்த இடம், எழிலிடமாக! எனினும், பார் அண்ணா, இந்த வெட்டவெளியை எவ்வளவு அழகான விழா இடமாக்கிக் காட்டுகிறேன் பார்! என்று அம்பில் கூறுகிறார் — பொல்லாத ஆசாமியல்லவா, செய்தாலும் செய்துவிடுவார்—எதற்கும் அவருடைய அந்த முயற்சிக்கு நானும் துணைஇருக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன்.

துவக்கமே மகிழ்ச்சியும் நம்பிக்கையும் தருவதாக அமைந்தது — அன்று அந்த வெட்ட வெளியை, வேகும் வெய்யிலில் காணச்சென்ற 'குழு' சாதாரணமாக, ஆண்டுக்கொருமுறையோ ஆறு திங்களுக்கு ஒரு முறையோ தான் ஒருசேரக் காணக்கூடியது— அன்று அம்பிலின் ஏற்பாட்டின் திறம் பாருங்கள், நாவலரும் கருணாநிதியும், நடராசனும் உள்ளூர் நண்பர்களும், நானும் சம்பத்தும், இவ்வளவுபேரும், சென்று பார்த்தோம்.

மைல் கணக்கில் விரிந்து பரந்து கிடக்கிறது திடல் — பார்ப்போம், எனக்குப் போர்வை தர உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது பார்க்கலாம் என்று மிரட்டுவதுபோலவே இருந்தது. எனினும் நாங்கள் திகைத்துப் போய் விடவில்லை.

தம்பி! எங்கள் கண்களைத்தான், திடல் மிரட்டிற்று — நீ காணும்போது, அங்கு ஒரு சிறிய — சீரிய எழிலூர் காணப் போகிறாய்!

பகலில் பகலவன் பகைவனைப் பார்க்கக்கூடும் — அதை, பந்தல் முறை கொண்டு தடுத்திடத் திட்டமிட்டிருக்கிறார் தருமு.

மாலையும் இரவும், மதியழகு உனக்கு விருந்தாக இருக்கும் — உள்ளத்து வெப்பத்தையும் போக்கிடும் மென் காற்றும் கிடைக்கும்-ஒளி, திரு இட மீட்புக்காக உன் கண்களில் தோன்றுகிறதே ஆர்வம், அது போலிருக்கும். செலவு சற்று அதிகமாகத்தான் இருக்கும் — தர்முதான் சொல்லி விட்டாரே, திருச்சி சென்னையை மிஞ்சும் என்று; எனினும், சற்றுத் தாராளமாகவே இருக்க வேண்டியதுதான் என்று நான், நமது நாவலருக்கும், அவர் எனக்கும், தைரியம் கூறிக் கொண்டிருக்கிறோம் — எல்லாம் உன்னுடைய கைவண்ணத்தைத் தாராளமாகப் பெறமுடியும் என்ற நம்பிக்கையால்தான்.

சுற்றிலும், ஒரு சிறிய ஊருக்கு மதில் அமைவதுபோல், தட்டி அடைப்பு; வண்டிகள் நிற்கத் தனியிடம். வாயற்புரங்கள் ஐந்து. முகப்பு வாயிலில் கண்ணுக்குக் காட்சியும் கருத்துக்கு விருந்துமானமுறையில் வண்ணம், ஓவியம். இதிலே, தம்பி, நீ பூரிப்புடன் உள்ளே நுழைந்ததும், ஓங்கி வளர்ந்துள்ள கொடிமரத்தில் நமது கழகக்கொடி பட்டொளி வீசிடக் காண ஏற்பாடாகி இருக்கிறது; அதைத் தொட்டுக் கொண்டு பிறைவடிவத்தில் நூற்றுக் கணக்கான கொடிமரங்கள்— அவைகளிலே கிளைக்கழகக் கொடிகள் குதூகலத்தைப் பறக்கவிட்டுக்கொண்டிருக்கும்; ஒரு புறம் பார்வையைச் செலுத்தினால் ஓவியக் காட்சிச்சாலை அழைக்கும்; மற்றோர் புறம், தொண்டர்கள் முகாமும், மருத்துவ விடுதியும் காட்சி தரும். சற்றுத் தொலைவிலே அங்காடி நிறுவப்படும்—அழகுற விளங்கும். மேலும் சற்றுத் தொலைவு நடந்து சென்றால், மாவட்ட முகாம்கள் இருக்கும்; உண்டிச் சாலைகள் வேண்டுமளவு இருக்க ஏற்பாடாகி வருகிறது; பொதுக்குழு உறுப்பினர்கள் கூடிப்பேச கொட்டகை, பொதுச் செயலாளர் காரியம் கவனிக்க மற்றோர் கொட்டகையும் இருக்கும், பெண்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளவும், குறிப்பாகக் குழந்தைகளுக்கு வசதி தரவும் தனிக் கொட்டகை போடப்படும். இவை யாவும் புடை சூழ, மாநில மாநாட்டுச் சொற்பொழிவுக் கூடம், ஆயிரம் அடி நீளமும் அறுநூறு அடி அகலமும் கொண்டதாய், அலங்கார மேடையும் அழகளிக்கும் வேறு அமைப்புகள் கொண்டதாக விளங்கும்.

தம்பி! புறம் இது! மாநாட்டு

எஃகு உள்ளமே கழகத்தின் சொத்து

அகச்சிறப்பு, நீயல்லவா அளிக்க வேண்டும். உன்னுலா முடியாது!!

எனக்கு இப்போது, 'புற'க்காட்சி அமைப்புக்காக எடுத்துக் கொள்ளப்படவேண்டிய முயற்சியின் அளவும் பணச் செலவின் மிகுதியும் தான் தெரிகிறது — புரிகிறது — மிரட்டவும் செய்கிறது.

மணி நான்கு—விடியப்போகிறது, தம்பி, இதை எண்ணி எழுதிக் கொண்டிருக்கிறேன், கோவையில் ஒரு ஓட்டல் அறையில்—கோமான்களும் சீமான்களும், மாளிகைகளிலே ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருக்கிருர்கள்!! இல்லை தம்பி! இல்லை! அவர்களும் தூங்கிக் கொண்டில்லை, "என்னைய்யா அக்ரமம்! ஒரு மாநில மாநாடு, பல இலட்சம் பேர் கூடுவது என்ருல், இலட்சக் கணக்கிலே செலவாகுமே, பணம் ஏது இதுகளிடம்" என்று எண்ணிக்கொண்டும், 'இதுகள்' இப்படியே வளர்ந்துகொண்டேபோனுல், நிலைமை என்ன ஆகும் என்ற நினைப்பும் சேர்ந்து அவர்களைத் தூக்கம் கொள்ளாமல் புரளச் செய்யும்—சிலரையாவது.

அவர்கள் அறியமாட்டார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள செல்வத்தை.

உன் ஆர்வமும் எழுச்சியும் பெற்றுத் தரும பெரும்பலனை, அந்தச் சீமான் பேழையில், கோழைபோலப் பதுங்கிக் கிடக்கும் பணம் பெற்றுத் தருமா, என்ன!! அதை நம்பியா, நாம் கழகம் நடத்துகிருேம். உன்னையல்லவா கருவூலமாகக் கொண்டு, கழகம் நடக்கிறது! வெள்ளியையும் தங்கத்தையும், வைரத்தையும் சர்க்கார் சின்னம் பொறித்த காகிதத்தையுமல்லவா, அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிருர்கள். கழகமோ, தம்பி! உன் எஃகு உள்ளத்தை நம்பிக் கொண்டிருக்கிறது. அம்பில் தர்மலிங்கம் அதற்காகத்தான், உன்னை அழைக்கிருர்.

அன்பன்,

அண்ணுத்துரை.

★ அட்வைசர் ஆட்சி! ★

'அட்வைசர்' வந்திறங்கிவிட்டார்.

மக்களின் கருப்புக் கொடிகள் வரவேற்க, திருவாங்கூருக்கு ராவ் என்பார் வந்து சேர்ந்துவிட்டார்.

கடந்த பொதுத் தேர்தலில், காங்கிரஸ் தோல்வியுற்ற நாள்முதல், கேரளம் என்ருலே டில்லிபீடத்துக்கு 'ஒரு கண்' இருந்து வருகிறது. அங்கு வெற்றி பெற்ற கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கையும், எதிர்க்கட்சியினரின் தொகையும், அவர்களின் கண்களை உறுத்திக்கொண்டே இருந்தது. அதனுல் வலிவற்றவர்களை அரசுக் கட்டிலில் அமர்த்தும் முயற்சி நடைபெற்றது! அதனுல், அமைச்சரவை கவிழ்ந்தது-அதையொட்டிப்பொதுத்தேர்தல் நடந்தது—நேரு பிரச்சார பீரங்கியை முடுக்கினுர்—காங்கிரஸ் பீடம் தனது சகலராஜதந்திரங்களையும்உபயோகித்தும், போதிய வெற்றி பெறமுடியவில்லை. அதனுல், 'நித்யகண்டம் பூர்ணுயுசான' நிலையில் ஒரு காங்கிரஸ் மந்திரிசபை அமைக்கப்பட்டது-இன்று அதுவும் கவிழ்ந்துபோய் விட்டது!! அதன் காரணமாக, இப்போது டில்லியின் நேரடி ஆட்சி ஆரம்பமாகி விட்டது.

காங்கிரஸ் மந்திரிசபை கவிழ்ந்து விட்டது என்ருல், கேரளத்தில் ஆட்சி நடத்தக்கூடிய வேறு கட்சிகளே இல்லையென்று பொருளல்ல. எதிர்க்கட்சியினர், தயார் என்ருர்கள்-பட்டம் தாணு, பலம் என் வசமுள்ளது என்று தெரிவித்தார்—கம்யூனிஸ்டுகள் ஒத்துழைப்புத்தருகிருேம்என்றுஉறுதி கூறினுர்கள். எனினும் டில்லிபீடம், அப்படியொரு எதிர்க்கட்சி அரசு அமைவதை விரும்பவில்லை! அதனுல், 'இப்போது இன்னெரு பொதுத் தேர்தலை நடத்த இயலாது' எனும் கருத்தில், அட்வைசர் ஆட்சியை ஆரம்பித்திருக்கிறது!!

டில்லி, தன்னுடைய எதேச்சாதிகாரத்தை எப்படி நிலை நாட்டிக்கொள்ளும் என்பதற்கோர் சான்ருகும், இது. இதுபோலத்தான், முன்பு, ஆந்திராவிலும் நிகழ்ந்தது.

ஆண்ட மந்திரிசபை தோற்றது என்ருல், அடுத்தபடியிருக்கும் கட்சியின் வசம் ஆட்சியினை ஒப்படைத்துப் பார்க்க வேண்டும், டில்லிபீடம். ஆனுல், அப்படிச் செய்யவில்லை!

ஆண்டால் எமது காங்கிரஸ்தான் ஆளவேண்டும், இல்லையேல் அங்கு சட்டசபையும் இராது, ஜனநாயக ஆட்சியும் ஏற்படாது என்கிற பயமுறுத்தலைத் தருவதாகவே உள்ளது, டில்லியின் போக்கு.

★

அந்தோ, தமிழகமே!

ஏடு அச்சேறும் நேரத்தில் சென்னைச் சட்டசபையின் சேதி கிடைத்திருக்கிறது!

காமராஜரின் கட்டளைப்படி காங்கிரஸ் MLAக்கள் கைதூக்கிவிட்டனராம், தமிழ் நாடு அல்லது தமிழகம் எனப் பெயரிடக் கூடாதென்று.

தேவிகுளம், பீர்மேடும் இனி கிடையாதாம்—கூறுகிருர், குல்லுக பட்டரின் சீடர் சுப்பிரமணியம்,

இதற்குக் காரணம், 'இப்படி முடிவு செய்யுங்கள்' என்று டில்லி பிறப்பித்துவிட்டதாம் தாக்கீது.

சொல்கிருர்கள், இவர்கள்!

தமிழ் நாடே, உன் மடியில் எவ்வளவு விசித்திரமானவர்கள் தவழுகிருர்கள்? அந்தோ! என்ன எரிமலையாகிறதே நெஞ்சம்!!

★

மங்கையின் கண்ணீர்

விரைவில் சுதந்திரவிழா கொண்டாட இருக்கிறது, மலேயா.

கடந்த உலகப்போருக்குப் பிறகு, வெள்ளையர்களையும், அதிகாரிகளையும், வேட்டையாடும் விபரீத இயக்கம் உருவாயிற்று, அங்கே. போரின்போது ஜப்பானியரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதத் தளவாடங்களை வைத்துக்கொண்டு, கம்யூனிஸ்டுகள் இவ்வித முறைகளில் உரிமைப் போர் நடத்தி வருகின்றனர், இந்த இயக்கத்தை நடத்திச் செல்பவர்களில் பெரும்பாலோர், சீனர்களாம். அவர்களையெல்லாம், கலவரக்காரர்கள் பயங்கரவாதிகள் என்று பெயர் சூட்டி பிரிட்டிஷ் அரசு, நேரடி போரே தொடுத்தது.

சுதந்திரச் சேதி அறிவிக்கப்பட்ட பின்னரும், அந்த இயக்கத்தாரின் நடவடிக்கைகள் பழைய போக்கிலேயே இருக்குமென்றே தெரிகிறது. சில மாதங்களுக்கு முன், ஒரு உடன் படிக்கைக்கு வருவதற்காக, கிளர்ச்சி தலைவர் சிங்பெங், மலேயா பிரதமர் துங்கு, சிங்கப்பூர் முதலமைச்சர் டேவிட்மார்ஷல் ஆகிய மூவரிடையே ஒரு மாநாடு நடைபெற்றது.

உடன்படிக்கை எதுவும், ஏற்படாததால், இன்னும் மலேயாக் காடுகளில் துப்பாக்கி முழக்கமும், வேட்டையாடுதலும் நின்றபாடில்லை.

கிளர்ச்சிக்காரர்களின் சாகசத்தையும், பிரிட்டிஷார் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கையையும் பின்னணியாக வைத்து எழுந்த காதலோவியம், இது.

கிளர்ச்சியினைப் பற்றி அறிய பயன்படும் என்பதால் தமிழில், தருகிறேன், நமக்கேற்ற வகையில்,

'ஆங்கிலத்தில் தீட்டியவர் சைகல் சிலிக் என்பார்.

—அரங்கண்ணல்.

டுமீல்! டுமீல்! என்கிற வேட்டுச்சப்தம், எங்கோ வெகுதூரத்தில் கேட்டது தான் தாமதம். விருந்தும் வேடிக்கையும் நிரம்பிக்கிடந்த அக்கூடம் வேதனைக்களமாயிற்று. விழிவீச்சும், அதை மிஞ்சும் மொழி வீச்சும் கொண்டு காளையரை அலைக்கழித்த கன்னியர் பலர், கலவரம்கொண்டு இங்குமங்கும் ஓடலாயினர். 'உயிர் போயினும் உனைப் பிரியேனடி மானே!' என்று கொஞ்சநேரத்துக்குமுன் வாக்குறுதி தந்த காதலன், தன்னுடைய உயிர் தப்பினால் போதுமென்று ஒண்ட இடம் தேடி ஓடினான். வாடிக்கைக்காரர்களுக்கு இன்னிசையும் அரும் சுவையும் அளித்துக்கொண்டிருந்த இசையாளர்கள், ஒளியலாயினர். ஒரு நிமிடத்துக்கு முன்பு, அந்த உல்லாச விடுதியின்கூடம் இருந்த இருப்பென்ன! இப்போது இருக்கும் நிலையென்ன! மனித வாழ்க்கை என்பதும் இப்படித்தானே?

கூடத்தின் ஒருபுறத்தில் மதுக் கோப்பையை ருசித்துக்கொண்டிருந்த மேஜர் மெகியு. வேட்டுச் சப்தம் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்தான். அவனுடைய விழிகளில் அனல் கிளம்பிற்று. எதிர்ப்பட்டோரையெல்லாம் தள்ளிக்கொண்டு விடுதியை விட்டு வீதிக்கு வந்தான். எங்கோ வெகு தூரத்தில் ஒரு வீடு தீப்பற்றிக் கொண்டு எரிந்தது. உடனே தன்னுடைய முகாமுக்குச் சென்று துருப்புகளுடன் கிளர்ச்சிக்காரர்களைப் பிடிக்கவேண்டும் என்கிற ஆர்வம் அவனுக்கு அதிகமாயிற்று. அந்த வேலைக்காகத்தான், ஏழாயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் இங்கிலாந்திலிருந்து அவனை அங்கே கொண்டு வந்து மேஜராக நியமித்திருந்தார்கள். முகாமை நோக்கி அவன் செல்வதற்குள், போலீஸ் லாரிகள் பறப்பதும், எதிர்வேட்டுச் சப்தம் எழும்புவதும் அவனுக்குக் கேட்கலாயிற்று. பிரபல போலீஸ் அதிகாரியான லிட்டில் கிளர்ச்சிக்காரர்களை அடக்கப் போயிருப்பதாக முகாமில் அறிவித்தார்கள். லிட்டிலும் சாதாரணமானவனல்ல; நன்கு பயிற்சி பெற்றவன். ஆதலால், மெகியு, என்ன தகவல் வருமோ என்பதை அறியும் ஆவலுடன் தன்னுடைய அறைக்குள் நுழைந்தான்.

அரைமணிநேரம் சென்றிருக்கும். அவன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த செய்தி வந்தது.

"கிளர்ச்சிக்காரர்களைத் துரத்திக்கொண்டு போன லிட்டிலின் கார், எரிந்து சாம்பலாகப் போயிற்று. அதோடு, அவரும் சாம்பலாகிப் போய்விட்டார்"

எவ்வளவு பயங்கரமான செய்தி, இது. செய்தி கொண்டுவந்த ஆள் சொன்னான், "கிளர்ச்சிக்காரர்களைத் துரத்திக்கொண்டு அவருடைய 'ஜீப்' போய்க்கொண்டிருந்தது. பின்னே எங்களுடைய லாரி சென்றது. ஒரு மூலையில், திடீரென ஏதோ ஒரு இரும்புப்பாளம் குன்றின்மேலிருந்து கீழே விழுந்த சப்தத்தைக் கேட்டோம். பார்த்தால், லிட்டில் சென்ற 'ஜீப்' பக்கத்திலிருந்த மரம் ஒன்றில் மோதி பள்ளத்தில்போய் விழுந்து எரிந்தது. உடனே நாங்கள் லாரியினின்றும் இறங்கினோம். எங்களை நோக்கிக் கிளர்ச்சிக்காரர்கள் சுட்டார்கள்; நாங்களும் சுட்டோம். அவர்கள் எங்கிருக்கிறார்கள், எப்படியிருக்கிறார்கள் என்று தெரியாததால் காட்டை நோக்கிமட்டும் சுட்டுக்கொண்டிருந்தோம். கொஞ்சநேரத்திற்கெல்லாம் அவர்கள் சுடுவது அடங்கிவிட்டது. 'ஜீப்' எப்படிக் கவிழ்ந்தது என்று போய்ப் பார்த்தோம். பெரிய இரும்புப் பாளத்தைத் திடீரென்று பாதையில் தள்ளிவிடவே, லிட்டிலின் ஜீப் 'சடேரென'த் திரும்பி விபத்து ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிந்தது. பிறகு, 'ஜீப்' விழுந்துகிடந்த இடத்தை எங்

கள்வசமிருந்த 'டார்ச்' ஒளியால் பார்த்தோம். ஜீப் எரிந்துகொண்டிருந்தது. அதிலிருந்த எல்லோரும் அதோடு எரிந்தேபோயிருப்பார்கள்''

பெருமூச்சுவிட்டவண்ணம் இதைக் கேட்டுக்கொண்டிருந்த மெகியு, "சரி, நீ போ! காலையில் நானே நேரில் போய் இத்துக்கச் செய்தியை அவர் வீட்டில் தெரிவிக்கிறேன்'' என்றான்.

*

காலை மலர்ந்தது, வழக்கம்போல. ஆனால், மெகியூவுக்கு நேரம் ஆகஆக, இந்தச் செய்தியை எப்படிப்போய் அவர்கள் வீட்டில் சொல்லுவது என்பது பெரிய பிரச்சினையாயிற்று. உன் கணவர் இறந்துவிட்டார் — என்று ஒரு பெண்ணிடம் போய்ச் சொல்வதென்பது, அப்பப்ப, எவ்வளவு கொடூரமான காரியம். அதை நினைத்துப் பார்த்தபோது இந்த உலகத்தின் மீதே அவனுக்கு வெறுப்பு வந்தது. எந்த நேரமும் உயிரோடு விளையாடிக் கொண்டிருக்கும் இந்த உத்தியோகமும் உத்தியோகமா என்று நினைத்தான். இப்படிப்பட்ட வேதனை விளையாட்டில் ஈடுபட்டிருப்பவர்களுக்கேன் பெண்டாட்டியும் பிள்ளையும்? — என்கிற எண்ணமும் ஏற்பட்டது. "நல்ல வேளை! நாம் கலியாணம் செய்து கொள்ளாதது...'' என்று எண்ணிய போது, பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்தில், அவனுடைய இதயம் கவர்ந்தவளாயிருந்த ஜோனுவின் ஞாபகம் வந்தது, நாம் இப்படி ஒரு விபத்தில் சிக்கி இறந்துபோயிந்தால் நம்முடைய ஜோனுவும் விதவையாகத்தானே ஆகியிருப்பாள்?—என்கிற நினைப்பே பயங்கரமாயிருந்தது. இராணுவ பலத்தைக்கொண்டு எத்தனையோ மைல்களுக்கப்பாலிருக்கும் நாடுகளைக்கூட ஆள நினைக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின்மீது அவனுக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. எனினும், என்ன செய்யமுடியும்? ரூபாய் அணு பைசாக்களுக்காக உத்தியோகம் வகிக்கும் ஒரு அதிகாரிதானே அவனும்!

விட்டிலின் வீட்டுக்கு இதுவரை அவன் சென்றவனே அல்ல. முதன் முதலாகப் போகும் சந்தர்ப்பம் இப்படியா வாய்க்கவேண்டும்? மிகவும் வேதனையுடன் அந்தப் பங்களாவுக்கு எதிரே காரை நிறுத்தினான். இப்படியொரு மாபெரும் விபத்து நடந்திருக்கும் என்கிற அறிகுறி கொஞ்சமும் தென்படவில்லை, அங்கு. அமைதி தவழ்ந்துகொண்டிருந்தது. மலைய இனத்தைச் சேர்ந்த ஒருவன், தோட்டத்தில் விழுந்துகிடந்த பழுப்பு இலைகளைக் கூட்டித் தள்ளிக்கொண்டிருந்தான். செடிகளில், அழகான மலர்கள், பூத்துக் குலுங்கிக்கொண்டிருந்தன. வாயில் பக்கம் கட்டப்பட்டிருந்த நாய்க்குட்டி ஒன்று, மெகியூவைக் கண்டதும் குரைத்தது. கதவைத் திறந்துகொண்டு உள்ளே வேலை பார்க்கும் சீனக்காரச் சிறுவன் ஒருவன் வந்தான். மெகியுவைக் கண்டதும், 'யாரைப் பார்க்கவேண்டும்?' என்றான். ஒரு வினாடி, என்ன பதில் சொல்வது என்றுபுரியவில்லை, மெகியுவுக்கு. அழகு தவழும் அந்த இடமும் அமைதிக்கு அணிகலனாக விளங்கும் அந்தப் பூக்களும், அவன் மனதுக்கு குதூகலம் விளைவிக்கவில்லை; மாறாக, எரிமலையைக் கிளறியிருந்தன. தான் சொல்லப்போகும் செய்தியால், இந்த அமைதியும் அழகும் எவ்வளவு சீக்கிரம் பாழாகிவிடும் என்பதை நினைத்த போது, அவன் நெஞ்சு வரண்டது. முகமெல்லாம் வியர்வை துளித்தது. தான் எப்படியெப்படி விஷயத்தை மெதுவாகச் சொல்லவேண்டும்என்று மனப்பாடம் செய்துகொண்டு வந்திருந்தானோ அதைக்கூட மறந்து விட்டான். இப்படி திகைத்துநிற்கும் அவனை, நல்லவேளையாக அந்தச் சிறுவன் கேட்ட இரண்டாவது கேள்வி காப்பாற்றியது.

"யாரை, எசமானியம்மாவைப் பார்க்கவேண்டுமா?''

"ஆமாம்!''

"உள்ளே வாருங்கள்!''

தூய்மையோடு விளங்கிய அறையும் அதன் அலங்காரமும், அவைகளில் தென்பட்ட அழகும், அமைதியும் அவனுடைய மனதைப் படாதபடுத்தின. ஓடிக்கொண்டிருந்த கடிகாரத்தின் டிக், டிக் ஒலியோடு அவனுடைய இதயத்துடிப்பும் போட்டிபோடலாயிற்று. சோபாவில் சாய்ந்தவாறு, கண்களை மூடிக்கொண்டான். கதவு திறக்கப்படும் ஓசை கேட்டதும், எழுந்து நின்றான். ஐயோ! இதென்ன ஆச்சரியம்? மெகியுவால், அவன் கண்களையே நம்பமுடியவில்லை. அவளா? அவள் எங்கே இங்கே வந்தாள்? எப்படி வந்தாள்? ஏன் வந்தாள்? எவளை இறந்துவிட்டாள் என்று கருதியிருந்தானோ அந்த ஜோனுவா இந்த வீட்டு எஜமானி? இறந்துபோன விட்டிலின் மனைவியா, என்ஜோனு? — என்று திகைத்தான், அவன். அறை முழுதுமே, சுற்றுவது போலிருந்தது. சிலைபோலான அவனைக் கண்டதும், அவள் திடுக்கிடவில்லை.

"ஓ! மெகியூ......? வருக, வருக. என்றாவது ஒரு நாள், என்னைத் தேடிக்கொண்டு வருவீர் என்பது நான் எதிர்பார்த்ததுதான்''

அவளுடைய குரலில், கேலியும் கோபமும் தொனித்தது. ஆனால் அவனுக்கோ, ஆச்சரியமும் பரபரப்பும் அதிகமாகிக்கொண்டிருந்தது. அவள், விட்டிலின் மனைவியா என்பதை அறிந்துகொள்ளத் துடித்தான்.

"ஜோனு! நீ...நீ...இந்த வீட்டில்.........''

"ஏன், மெகியூ! தனியாக இருக்கிறேனு என்றுதானே கேட்க விரும்புகிறீர்......அந்தச் சந்தர்ப்பத்தைத்தானே எதிர்பார்த்து இங்கே வந்திருக்கிறீர்......''

"என்ன சொல்கிறாய், ஜோனு?''

"நான் என்ன சொல்லுகிறேன் என்பது கூட காமபோதையில் உம்முடைய காதில் ஏறவில்லையோ?''

"காமபோதையா!''

"பிறகென்ன......அவர் இல்லாத வேளையில், இங்கே நீர் வரக்காரணமென்ன?''

"ஐயோ, ஜோனு! நீ, இங்கேயிருப்பாய் என்பது எனக்குக் கொஞ்சமும் தெரியாது. உன்னை, இந்த நிலையில், சந்திப்பேன் என்று எண்ணியதுகூட இல்லை நான்......''

"என்ன? நான் இங்கேயிருப்பது தெரியாதா?''

"தெரிந்திருந்தால், நீ இந்த நிலையில் இருப்பது தெரிந்திருந்தால் வந்தே இருக்கமாட்டேன்......''

அவனுடைய கண்களில், நீர் வழியலாயிற்று. சோபாவை பிடித்துக் கொண்டு, தள்ளாடிய வண்ணம் மெகியூ உட்கார்ந்தான். எதிர்பாராத சந்திப்பு. எந்த ஏந்திழையாளைத் தான் இனிமேல் காணப்போவதேயில்லை யென்று கருதியிருந்தானோ, அவளை மாற்றானின் மனைவியாகச் சந்திக்கிறான், அதிலும், அவளிடம் அவளது கணவனின் மரணச் செய்தியை அறிவிக்க வந்துநிற்கிறான். அவளோ புதிர்மேல் புதிர்போடுவது போல அவனிடம் பேசுகிறாள். மெகியூவுக்கு எதுவுமே விளங்கவில்லை. ஏனிப்படி அவள் தன்னிடம் பேசவேண்டும்... ஏதோ முன்னமேயே அவள் இங்கிருப்பது எனக்குத் தெரியும் என்று தெரிவிக்கிறாளே...... என்று திகைத்தான். அவனுடைய இந்த நிலையைக் கண்டு அவளும் விழித்தாள்.

"மெகியூ! நான், விட்டிலின் மனைவியாக இங்கேயிருப்பது உமக்குத் தெரியாதா?''

"தெரியவே தெரியாது, ஜோனு''

"அன்று நடைபெற்ற விருந்தில் என்னை நீர் பார்க்கவில்லை?''

ஆறுமாதத்துக்கு முன்பு, அங்கே ஒருவிருந்து நடைபெற்றது. அதற்கு, ஜோனு தன் கணவனுடன் போயிருந்தாள். மெகியூவும் வந்திருந்தான். ஆனால், அவன், அவளைப்பார்த்தானே ஒழிய அவன் அவளைக் கவனிக்கவில்லை. முதலில், மெகியூவைப் பார்த்ததும் அவள் திடுக்கிட்டுப்போய் விட்டாள். ஏனெனில், பன்னிரண்

டாண்டுகளுக்கு முன்பு, லண்டன் மாநகரிலே அவனும் அவளும் பாடித் திரிந்த இரு சிட்டுக்கள்! அப்போதும் மெகியூ, ஒரு இராணுவ அதிகாரி யாகத்தானிருந்தான். அவனுக்கும் சீமானின்செல்வியான ஜோனுவுக்கும் நாட்டியக்கூடம் ஒன்றிலே காதல் அரும்பிற்று. கனிமரச்சோலைகள், பனிசிந்தும் புற்றரைகள், அந்தி நேரங்கள், அவர்களாது சந்திப்பை வளர்த்தன, இருமனமும், ஒருமன மாக அவளின் தந்தையும் சம்மதித் திருந்தார்! அவர்களிருவருக்கும், திருமண தேதியும் குறித்தாகிவிட் டது. ஆனல், மாபாதகன் இட்லர் அந்த நேரத்தில்தானு, இங்கிலாந் தின்மீது போர் தொடுக்கவேண்டும்? பூவையும் வீரனும், பூவும் மணமும் போல ஆவதற்கு இடையூருக வந் தது, அந்தப் போர். அதன் காரண மாக, இங்கிலாந்தின் இராணுவங்கள் நேசநாடுகளைப் பாதுகாக்க அனுப்பப் பட்டன. பிரான்சுக்குச் செல்ல வேண்டுமென்று, மெகியூ, உதத்ர விடப்பட்டான். அப்போது, அவன் மனம் பட்டபாடு...? அப்பப்பா, சொல் லும் தரமல்ல! துடிதுடித்த வண்ணம், தன் துடியிடையாளிடம் சொல்லி விடைபெறுவதற்கக அவளது இருப் பிடம் நாடிச்சென்றுன். அதோ, அவளது மாளிகை! அவன் நெருங்கும் நேரத்தில், சங்கொலி கேட்டது —ஆகாயவிமானப்படை யெடுப்பை அறிவிக்கும் சங்கொலி. இட்லரின் விமானங்கள், ஒவ்வொரு நாளும் இலண்டன்மாநகரை அக் கினிமயமாக்கிக் கொண்டிருந்தன!அப் போது படையெடுப்பை அறிவிக்கும் எச்சரிக்கைச் சங்கு ஒலித்ததும், எல் லோரும் அதற்காக வெட்டப் பட்டிருந்த பள்ளங்களில் போய்ப் பதுங்கிக்கொண்டால்தான் தப்பமுடி யும். அதனல், வெகியூவும் அருகே யிருந்த ஒரு 'பதுங்குமிடத்தில்' போய் ஒதுங்கிக்கொண்டான்.

சில நிமிடங்களுக்குள் விமானப் படையெடுப்பு முடிந்தது. வெளியில் வந்தான் அவன்! ஒரே நெருப்பு மய மாக இருந்தது, எங்கும். குண்டு வீச்சுக்கு இரையாகி, பற்றிக்கொண்டு எரிந்த மாளிகைகளில், ஜோனு வுடையதும் ஒன்று. அவனுக்கு எப்படி யிருக்கும்? அருகே நெருங்கி விபரம் விசாரிக்கவும் அனுமதிக்கவில்லை அதி காரிகள். காலை மலர்ந்ததும், அவன் பிரான்சுக்கு சென்றுகவேணடும்! யாரையும் விபரம் கேட்டறியவும் வழி யில்லை. வீடுகள் எரிந்த கோரத்தைப் பார்த்தால், ஜோனுவும் நிச்சயம் தீக்கு இரையாகியிருக்கத்தான்வேண் டும். இப்படி, இடியும் மின்னலும் மனதில் போட்டியிட, சூன்யமான உள்ளத்தோடு அவன் இங்கிலாந்தை விட்டுக் கிளம்பினுன். பிரான்சு, ஆபி ரிகா இப்படி எங்கெங்கோ சுற்றி விட்டு, கடைசியில் மலேயாவில் நடைபெறும் கிளர்ச்சிக்காரர்களின் நடவடிக்கைகளை அடக்குவதற்காக அவனை, மேன்மை தங்கிய பிரிட்டிஷ் அரசாங்கம் அனுப்பி வைத்திருந்தது. ஜோனுவை இனிமேல் என்றும் சந் திக்கப்போவதில்லை யென்றே அவன் கருதினுன்! அவளும், அப்படித்தான் கருதியிருந்தாள்! ஏனெனில், குண்டு வீச்சின்போது அவளது மாளிகை மண்மேடாயிற்றே ஒழிய அவள் தப்பி விட்டாள். ஆனல், தன்னுடைய காதலன் என்ன ஆனுன் என்கிற விபரம் மட்டும் அறிய முடியவில்லை அவளால். விசாரித்ததில், வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டதாக யாரோ சொன்னுர்கள். ஆண்டுகள் உருண்டன! போரும் ஒரு முடிவுக்கு வந்தது!

எத்தனை நாளைக்குத்தான், தன் பெண்ணை தனியாகயிருக்க அனுமதிப் பார் தந்தை? அதனல், சிங்கப்பூரில் பிரபல போலீஸ் அதிகாரியாயிருந்த ஜான்விட்டிலிக்கும் அவளுக்கும் முடிச்சுப்போடப்பட்டது. விட்டிலும், கெட்டவனல்ல; அவளைத் தன் உயி ராக மதித்தான். ஒவ்வோர் சமயம், ஜோனுவுக்கு மெகியூவின் கவனம் வந்தாலும் விட்டிலின் அன்பும் பாச மும் அவளை அவன் வசமே ஆழ்த்தி யது. அதன் விளைவாக ஒரு குழந்தை பிறந்தது அவளுக்கு! அதனல், கிட் டத்தட்ட அவள் மெகியூவை மறந்து விட்ட நிலையில் இருந்தாள். அப் போதுதான், விட்டிலை, சிங்கப்பூரை விட்டு, மலேயாவுக்கு மாற்றினுர்கள்-கிளர்ச்சிக்காரர்களை அடக்க திறமை யானவர்கள் தேவை என்பதற்காக. இங்கு வந்துகூட, அவள் மெகியு வைச் சந்திக்கவில்லை. எனினும், ஏதோ ஒரு விருந்தின்போது, அவள் அவனைப்பார்த்தாள்! பழைய நினைவு கள், சுருள்போல ஓடிவந்தன— அவனும் தன்னைக் கூர்ந்து பார்ப்பது போல ஒரு பிரேமை ஏற்பட்டது மன தில்—இதயம் துடித்தாள். எனினும், இப்போது என்ன செய்யமுடியும்? அவன் கண்ணில்பட்டால், அணைந்த தீ, கொழுந்துவிட்டெரியத்தான் செய் யும். அதன் விளைவாக, தன்னுடைய வாழ்க்கையில் சலனம் ஏற்படும்— மகிழ்ச்சி குலையும் — மாருத மனப் போராட்டத்துடன் தானும் தன் கணவனும் வாழ்க்கை நடத்த நேரும். இந்த விளைவுகளையெல்லாம் சந்திக்க விரும்பவில்லை, ஜோனு. அவள் இப் போது கன்னியல்லவே;தாயாயிற்றே! குடும்பக் குலக்கொடியான அவள், அவன் பார்வையினின்றும், அன்று மட்டுமல்ல, எப்போதும் தப்பியிருக் கவே விரும்பினுள். அதற்காகவே, எந்த விருந்துக்கும், வேடிக்கைகளுக் கும் அவள் வெளியில் போவதில்லை. ஆனல், இவள் இப்படிக் கருதினளே ஒழிய, மெகியூ, விருந்தின்போது அவளைக் கவனிக்கவேயில்லை. அவன் தான், அவள் வீடு பற்றி எரிந்ததைக் கண்ணுரக் கண்டிருக்கிருனே! இப் போது நான் சந்திக்கிருன்! அதுவும் எப்படிப்பட்ட நிலையில்? அவளது கணவன் இறந்துபோன செய்தியைத் தெரிவிப்பவனுக!!

*

"அன்று நடைபெற்ற விருந்தில் என்னை நீர் பார்க்கவில்லை?"

"என்றுவது ஒருநாள் என்னைத் தேடிக் கொண்டு வருவீர் என்பது நான் எதிர் பார்த்ததுதான்"

"தனியாக இருக்கிறேனு என்றுதானே கேட்க விரும்புகிறீர். அந்தச் சந்தர்ப்பந் தைத்தானே எதிர்பார்த்து இங்கே வந் திருக்கிறீர்...?"

அவள் சொன்ன இந்த வார்த்தை கள், அவன் மனதில் எதிரொலித் தன. தலையைக் கைகளால் பிடித்தவ னுக கண்களை உயர்த்தினுன். எதிரே குழம்பிய உள்ளத்துடன் நிற்கும் அக் கோதை தெரிந்தாள். அவன் மனம் குமுறிற்று. அவள் ஒரு விதவை— என்று எண்ணியதும் அவன் கண் களில் நீர் வழிந்தோடிற்று. அவளோ பழைய காதல் நினைவுகளால் தத் தளிக்கிருன் என்றுகருதினுள். அவள் மனமும் மெழுகு ஆகத் துவங்கியது. அப்படியே அவனருகிலிருந்தால், தன்னுடைய திடம் பஞ்சாகப் பறந்து விடும் என்பது புரிந்தது அவளுக்கு. பேசாமல் திரும்பினுள்; அடுத்த அறைக்குச் சென்றுவிட்டாள். கத வின் சப்தம் கேட்டுத் திரும்பினுன் மெகியூ. அவனுல் இருக்கமுடிய வில்லை, அங்கே. எழுந்தான். மீண் டும் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. ஒரு சிறு குழந்தை, தன்னுடைய குறுகுறு பார்வையுடன் தவழ்ந்து கொண்டு வந்தது, அவனை நோக்கி. "ஐயோ, இந்தக் குழந்தையைக் காப் பாற்ற இனி யார் இருக்கிருர்கள்..." என்று நினைத்தபோது, வாய்விட்டே அழவேண்டியவனுன். முத்துமுத்தாக கண்ணீர்த் துளிகள் கன்னங்களில் உருளலாயின. தவழ்ந்துவந்த தங் கத்தை எடுத்து தன்னுடைய கண்ணீ ரால் குளிப்பாட்டியவண்ணம், அதன் கன்னங்களில் முத்தமிட்டுவிட்டு, வேகமாக வெளியேறினுன் அந்தப் பங்களாவைவிட்டு-துக்கச் சேதியைச் சொல்லவும் மனமற்றவனுய்.

இந்தக் காட்சிகளை, மறைந்து நின்று கவனித்த ஜோனுவுக்கும் துக் கம் தொண்டையை அடைத்தது. அவன் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள் அந்த அபாக்கிய வதி.

2

மெகியூவுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஜோனுவின் வீட்டிலிருந்து, எப்படி

S. RAMAMOORTHY. M.O.L.

அவனுடைய அறைக்கு வந்து சேர்ந்தான் என்பதுகூட ஆச்சரியம்தான். அவனுக்கு ஏவலாளாகயிருந்த ஒரு சீனச் சிறுவன், மேசையின்மீது உணவுத் தட்டுகளைக் கொண்டு வைத்துவிட்டு மெதுவான குரலில், 'எசமான்' என்ருன். 'என்ன?' என்று கூட கேட்க விரும்பாத மெகியூ, அவன் பக்கம் பார்வையைத் திருப்பவே, 'ஒரு விசிடிங் கார்டை'க் கொடுத்தான். அதில், "லி-கோலார் கம்பெனி" என்று எழுதப்பட்டிருந்தது. "மிக மிக முக்கியமான வேலையாக உங்களைப் பார்க்கவேண்டுமாம்" என்ருன் பையன். இப்படிப் பலர், அடிக்கடி, மெகியூவைப் பார்க்க வருவதுண்டு – கிளர்ச்சிக்காரர்களைப்பற்றிய எச்சரிக்கைகள், இருக்குமிடங்கள், தாக்க இருக்கும் இடங்கள் முதலிய விபரங்களோடு. அதனுல், வரச்சொல்லும்படி தலையசைத்தான், மெகியூ. லீ, என்று குறிப்பிடப்பட்ட அந்த ஆள் வந்தாள்.

"கம்பெனி விஷயமாக என்னைச் சந்திக்க வந்தீரா?"

"இல்லை, தங்கள் மனக் கஷ்டம் அறிந்து அதனைப் போக்கவந்தேன்"

அந்த ஆளுடைய பேச்சும் நடையுடை பாவனையும் மெகியூவுக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஆனுலும், விரக்தி கொண்டவனுக, "கிளர்ச்சிக்காரர்களைப்பற்றி உமக்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்டான்.

"விசுவாசம் நிரம்பிய பிரிட்டிஷ் பிரஜை நான்! எனக்கு பல வியாபாரக் கம்பெனிகள் இங்கே இருக்கின்றன. அவைகளுக்கு ஊனம் ஏற்படாமல் தடுக்க, பிரிட்டிஷ் சர்க்காரால் இயலவில்லை. அதனுல், கிளர்ச்சிக்காரர்களின் தயவைப் பெற்று வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன்."

மெகியூவைச் சந்திக்க வரும் பலர் இப்படித்தான் சொல்வது வழக்கம். அதிலும், சீனர்களைப்பற்றி, நன்ருக அறிவானுதலால், பேசாமல் தலையை ஆட்டிக்கொண்டிருந்தான். "மேஜர் மெகியூ! அதனுல், கிளர்ச்சிக்காரர்களைப்பற்றிச் சிறிது தெரியும் எனக்கு. அதோடு, காலை முதல் உங்கள் மனதில் ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சியையும் நான் அறிவேன்."

"என்ன?" என்று கேட்ட மெகியூ திடுக்கிட்டுவிட்டான். காலையில் ஜோனுவால் தன் மனதில் உண்டாகியிருக்கும் மாபெரும் குழப்பம் இவனுக்கு எப்படித் தெரிய முடியும், என்கிற சந்தேகத்துடன் "அது எப்படி உனக்குத் தெரியும்?" என்ருன்.

"லிட்டிலுடைய வீட்டில் எடுபிடியாயிருக்கும் சீனக்காரப் பையன், என் கம்பெனியின் இரகசிய ஆள். அங்கு நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் உடனுக்குடன் எனக்கு தெரிவிப்பது வழக்கம்."

இதைச் சொன்னபோது, லீயின் முகத்தில் ஏற்பட்ட புன்சிரிப்பை, மெகியூ கவனிக்காமலில்லை. சீனர்களின் போக்கு, அவனுக்கு அதிசயமாயிருந்தது.

"அதற்கும் உமக்கும் என்ன சம்பந்தம்"

"நான் கிழவன்தான்! ஆனுல், உங்கள் நாட்டில் கற்றுக்கொடுக்கப் படுகிற மனோதத்துவங்களிலும் சிறிது பயிற்சி உண்டு எனக்கு."

"அதனுல், என்ன பிரயோசனம் இப்போது!"

"உங்களைப்பற்றித் தவறுதலாக அந்த அம்மா எண்ணியதை எண்ணி மனவேதனைப்படுகிறீர்கள்......"

"சரி!"

"அதற்குப் பிராயச்சித்தமாக உங்களை என்ன செய்யச் சொன்னுலும் செய்வீர்கள்"

"ஊம்!"

"அப்படிச் செய்வதன் மூலம், அந்த அம்மாவின் வாழ்க்கைக்கு புது ஒளி ஏற்படும் என்று தெரிந்தால் கட்டாயம் செய்வீர்கள்."

"வளர்த்தாதே ஐயா!"

"சுருக்கமாகவே சொல்கிறேன். ஒரு நிபந்தனைக்கு நீங்கள் உட்பட்டால், அந்த அம்மா விதவையாகாமல் செய்கிறேன் நான்!"

"என்ன?"

"லிட்டிலைத் திருப்பிக் கொண்டு போய், அந்த அம்மணியிடம் சேர்ப்பிக்கிறேன்"

"என்ன லிட்டிலையா?"

"ஆமாம்"

"இறந்துபோன லிட்டிலையா!"

"இறந்தார் என்று யார் சொன்னது?"

"கார் சுக்குநூருக எரிந்து போயிற்ருமே..."

"உண்மைதான்! அதனுல் லிட்டிலும் செத்தார் என்று எப்படிச் சொல்ல முடியும்?"

"இது, உமது யூகமா!"

"மன்னிக்க வேண்டும், உம்முடைய மனநிலையை அறிந்து உதவி செய்ய வந்த சீனக்காரன், நான். லிட்டில் உயிரோடு அவர்கள் வசமிருப்பதை இந்தக் கண்களால் பார்த்தேன். நீர் விரும்பினுல், நான் சொல்கிறபடி கேட்டால்: அவரைத் தப்பவைக்கலாம்...."

"எவ்வளவு பணம் வேண்டுமானுலும், தருகிறேன்"

"அவர்களுக்குப் பணமல்ல பெரிது! ஆள்! தங்களை அழிக்க பிரிட்டிஷ் அரசு, அனுப்பும் பிரமுகர்களைப் பிடித்து வைப்பதிலே அவர்களுக்கொருஆசை. அதன்படி, கார் கவிழ்ந்ததும், லிட்டிலைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். பிறகுதான், கார் எரிந்தது. இப்போது, அவருக்குப் பதில் நீங்கள் உங்களை ஒப்படைத்தால், லிட்டிலை விடுவிக்கும்படி நான் செய்கிறேன்......என்னயோசிக்கிறீர்கள்? இந்தக் கிழவன் வார்த்தையை எப்படி நம்பலாம் என்ரு...இதோ!" என்று கொஞ்சம் கையைத் தட்டியதும், ஒரு அம்மாவும், இன்னொரு சிறுவனும் வந்து நின்ருர்கள்.

"இது, என் மனைவி, இவன் என் ஒரே மகன். இவர்களை, இங்கே அடகு வைக்க நான், சம்மதிக்கிறேன். இவர்கள், என்னைச் சேர்ந்தவர்களா இல்லையா என்பதை நிரூபிக்கும் அத்தாட்சிப் பத்திரங்களைப் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்களும் நானும் போவோம். லிட்டில், இங்கேவந்ததும் இவர்களை விடுவிக்கும்படியும், எனக்கு எவ்வித ஆபத்தும் வராதபடியும் உங்கள் அதிகாரியிடம் நீங்கள் உத்தரவிட்டுவிட்டு வரவேண்டும்"

"சரி" என்று சொன்ன மெகியூ, அறையை விட்டு வெளியேவந்து, ஒரு அதிகாரியிடம், "நான் இவருடன் போகிறேன். லிட்டில் அகப்பட்டு விடலாம் என்கிற நம்பிக்கையில் போகிறேன். என்னை யாரும் பின் தொடரவேண்டாம். இன்னும் இரண்டுமணி நேரத்துக்கு இதைப் பற்றி மேலதிகாரிகளுக்கும் தெரிவிக்க வேண்டாம். அவருடைய மகனையும், மனைவியையும் லிட்டில் இங்குவந்ததும் அனுப்பிவிடுங்கள்" என்று கட்டளையிட்டுவிட்டு அந்தக் கிழவனுடன் வெளியே வந்தான்.

தயாராகயிருந்த கிழவனுடைய கார் அவர்கள் இருவரையும் ஏற்றிக் கொண்டு பறந்தது.

நகர எல்லையைத் தாண்டியதும், வெளிப்புறம் எதுவும் தெரியாமல் காருக்குள் படுதாக்களைத் தொங்க விட்டுவிட்டான், லீ.

இருபது மைல்களுக்குமேல் போயிருக்கக்கூடும். ஓரிடத்தில் கார் நின்றது. "நீங்கள் உள்ளேயே இருங்கள்" என்று சொல்லிவிட்டு லீ, கீழே இறங்கினுன். சில வினுடிகளுக்கெல்லாம் மனிதர்கள் வரும் காலடிஓசை கேட்டது. காரின் கதவைத் திறந்து "கீழே இறங்குங்கள் மகியூ" என்ருன், லீ.

தலையிலும் கையிலும் கட்டுகள் போடப்பட்ட நிலையிலிருந்த லிட்டிலைப் பார்த்தான் மெகியூ. இருவரும்

ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். 'மெகியூ' என்று லிட்டில் அழைப்பதற்குள் அவனைக் காருக்குள் உட்காரவைத்தனர். லீயும் ஏறிக்கொண்டான். மெகியூவைச் சுற்றி, துப்பாக்கித் தாங்கிய பலர் சூழ்ந்துகொண்டனர். திரும்பிப் பார்த்தான், மெகியூ. கார், புறப்பட்டுவிட்டது. நிம்மதி கலந்த ஒரு பெருமூச்சைவிட்டுவிட்டு, கிளர்ச்சிக்காரர்களுடன் சென்றான், மெகியூ.

*

லீயையும் லிட்டிலையும் கண்ட இராணுவ அதிகாரி "எங்கே மெகியூ?" என்றான்.

"இவருடைய இடத்துக்கு அவர் போய்விட்டார்" என்று சாவதானமாகச் சொன்னான், லீ.

"என்ன?" என்று ஆத்திரத்தோடு கேட்ட அதிகாரி, "லீ! உன்னைக் கைதுசெய்திருக்கிறேன்" என்று கூவினான்.

சிரித்தான், லீ. "என் உதவிக்கு நீங்கள் அளிக்கும் பரிசு, இதுதானா? ஐயா, அதிகாரியே; என்னைக் கைது செய்தால், மெகியூவின் உயிருக்குத்தான் ஆபத்து ஏற்படும்" என்றான் நிதானமாக "அவருக்கும் எனக்கும் உள்ள ஒப்பந்தத்தை மறந்துவிட வேண்டாம்"

என்னசெய்வது, அதிகாரியும் பெருமூச்சுவிட்டான். எதுவும்செய்யவில்லை.

ஜோனே, பிறர் மூலம் தன் கணவனுக்கேற்பட்ட விபத்துப்பற்றி அறிந்து வீட்டில் துடிதுடித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு, லிட்டிலை உயிரோடு கண்டதும், ஆனந்தம் தாங்கமுடியவில்லை. லிட்டில், தான் விடுதலையான விபரத்தையும், மெகியூவின் தியாகத்தையும் விவரித்தபோது, ஜோனே பதில் ஏதும் பேசவில்லை. படுக்கையறையை நோக்கி ஓடினாள், முகத்தை மூடிய வண்ணம், கட்டிலில் சாய்ந்து கண்ணீர் வடிக்கலானாள். அவள் கணவனோ, புதிர் அறியமாட்டாதவனாய் திகைத்து நின்றான்.

★

-6-ம் பக்கத் தொடர்ச்சி

ஆக்கத்திற்கு ஊக்கம் அளிக்காமைக்காக அத்துறையில் பேதையராக இருக்கின்றார்கள் என்று எண்ணினாலும், இந்தி மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதை எண்ணும்போது அவரை வெறும் பேதையர் என்று நினைத்து அமைய இயலவில்லை.

ஒரேநேரத்தில் இரண்டு தன்மை காட்டுகின்றார்கள். ஒன்று தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வழி கோலாமை. இரண்டு. இந்திககு வளர்ச்சி தேடுதல். இரண்டும் இருவேறானவை. எனவேதான் பேதைமையுடன் பிறிதொரு பண்பும் அவர்களிடத்தே இருத்தல் வேண்டும் எனநினைக்கத் தோன்றுகிறது. அந்தப் பிறிதொன்று அச்சம் எனக் கூறலாம். டில்லி அரசினர்பால் அவர்கள் கொண்டிருக்கும்அச்சம் இந்திக்குவளர்ச்சியூட்டுகின்றது. டில்லியின் அடிமையாய்க் கிடக்கின்றவரை, இவர்களின் கையையும் காலையும் இணைத்து வைத்து ஆட்டும் சக்தி டில்லியில் கிடக்கின்றவரையில் அவர்கள் சொன்ன வண்ணம் செய்து கிடக்கும்பாவையர்களாகத்தான் இவர்கள் கிடப்பர்.

தமிழ்நாட்டுமக்களுக்கும் அவர்களை அடக்கும் அதிகாரம் இருக்கின்றது. ஆனால் அந்த அதிகாரம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் என்ற உருவில் வந்து போகின்றது. அப்போது மக்களில் பலர் உறங்கிக்கிடக்கின்றனர். ஒருசிலர் மயங்கி விடுகின்றனர். ஆனால் டில்லியின் அதிகாரம் அவ்வப்போது அவர்களை ஆட்டுவிக்கின்றது; அவர்களும் ஆடுகின்றார்கள். எப்போதோ வர இருக்கும் தேர்தலைப் பற்றி அஞ்சாமலே திரிகின்றனர்.

எனவேதான் தமிழ்த்தாய் வாடிக் கிடக்கையில ஏதில் இந்தி ஆரும்வண்ணம் ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூபாய்களைச் செலவழிக்க எண்ணும் பெருஞ்செல்வம் பெற்ற பேதையராக உள்ளனர்.

தமிழ்மொழி ஆட்சிமொழியாகும் நிலைபெற்று உயரவேண்டுமாயின், ஒன்றுஇவர்கள்பேதைமை தெளிய வேண்டும்; அல்லது டில்லியிடம் அஞ்சும் அச்சம் அகல வேண்டும். இவை நடப்பது எளிதாகத் தோன்றவில்லை, ஆகவே தமிழ் மக்கள் தங்கள் கையில் எப்போதோ ஒருமுறை கிடைக்கும் வாக்கு என்ற அதிகாரத்தை நன்முறையில் பயன்படுத்தித்தான் தீரவேண்டும்.

★

இடையில், சில நாட்கள்தான்!

மே திங்கள் 17, 18, 19, 20 தேதிகளில், நமது இரண்டாவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெறுவது உறுதியென முடிவுசெய்யப்பட்டுவிட்டது.

வரவேற்புக் கழகத்தாரும் திருச்சி தீரர்களும், மாநாடு நடத்துவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டனரென அறிகிறோம். பந்தலமைப்பு முதலிய ஏற்பாடுகளும், துவக்கப்பட்டுவிட்டன. இடையிலிருக்கும் நாட்கள் கொஞ்சம்! — எனினும், தோழர்களின் ஆர்வமும் உணர்ச்சியும், எல்லா ஏற்பாடுகளையும் செவ்வனே அமையச் செய்துவிடும் என நம்புகிறோம்.

நமது மாநில மாநாடு!—எண்ணிடும்போதே இதயத்தில் களிப்பும் அதில் நாம் ஆற்றவேண்டிய பங்கென்ன என்று கேட்கும் ஆர்வமும் படைத்த பல்லாயிரக் கணக்கான வீரர்கள் இருக்கிறார்கள், நம் அணியில்.

மாநாடு கூடிடும் நேரத்தையும், எடுக்கப்படவேண்டியிருக்கிற முடிவுகளையும்பற்றி எண்ணும்போது, மாநாட்டின் சிறப்பும் பொலிவும் கண்முன்னே காட்சி தருகிறது.

இரண்டாவது மாநில மாநாடு, தாயக வரலாற்றில், இடம்பெறப் போகிற மாநாடு.

இடையில், இன்னும் கொஞ்ச நாட்கள்தான்! — ஆகவே ஒவ்வொரு கழகத்தவரும், தோழர்களும மாநில மாநாட்டிற்கு இப்போதிருந்தே தயாராகும்படி தத்தமது நண்பர்களையும் ஊராரையும் யும் அழைக்கும் முயற்சியிலீடுபடக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாற்றாரையும் கலந்துகொள்ளும்படிச் செய்யவேண்டும். அப்போதுதான், அவரவர் மனதிலிருக்கும் மன இருள் அகல முடியும்.

நமக்கு இருக்கும் வசதிகள் கொஞ்சம் — நாட்டின் ஏடுகள், துரோக துந்துபி முழக்கும் சுபாவம் கொண்டவை—கோயங்காவும் குறுநில மன்னர்களும் அற்றவர்கள் நாம், ஆனால், அவர்கள் தரும் காசையும் ஆசைகளையும் விட, அற்புதமான மாபெரும் செல்வம் நமக்கு இருக்கிறது! அதுதான், ஆர்வமுள்ள, அருங்காளைகள். எவருக்கும், கிடைக்காத செல்வம் இது.

நாட்டின் செல்வங்களே, மாநில மாநாட்டினைப்பற்றி இப்போதே, எடுத்துரையுங்கள், மக்களிடம். ஏராளமானோரைத் திரட்டிக்கொண்டு வரும், ஏற்பாடுகளை, இன்று முதல் ஒவ்வொரு கழகத்தவரும் செய்யத் துவங்குங்கள். இடையிலிருப்பது, சில நாட்கள்தான்!!

★

கருத்து மன்றம்

தருமன் சால்பு 4

புராண இதிகாச காவலர்களின் கட்டை மீறி உண்மைக்குயர்வளிப்பதே உரிய கடனெனக் கொண்ட நாவலர் பாரதியாரவர்கள், தாம் கண்ட தருமனையும் துரியோதனனையும் நாட்டில் உள்ள நல்லவர்களிடையே உலவவிட்டு நேர்மையின் இருப்பிடத்துக்கு இலக்காகிவிட்டார்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி உடல் வ்ளர்ப்போர்—உண்மையை உணர மறுப்போர் — உணர்ந்ததை உரைக்க அஞ்சுவோர்—அறியாமையால் அரற்றுவோர் — ஆத்திரத்தால் குளறுவோர்—ஆணவத்தால் ஆர்ப்பரிப்போர் ஆகிய நாவாணிகர்களே நல்லவர்கள் — நாட்டின் நலம் பேணும் பெரியவர்கள் என்று போற்றப் பட்டவர்கள் கண்ட தரும துரியோதனாதியர்கட்கும், நமது கணக்காயர் காட்டும் தரும துரியோதனாதியர்கட்கும் உள்ள வேறுபாட்டை நோக்கும்போது, நாம் [நாடு] காணவேண்டிய அறிவாலயத்தை எத்துணைத் தடித்த ஆணவ அழுக்கு மூடிக்கிடக்கிறதென்பது தெற்றெனப் புலனாகின்றது.

இதோ அந்த ஆணவத்துக்கோர் எடுத்துக்காட்டு. டில்லியில் ஆண்டுதோறும் "இராம லீலா" என்ற பெயரால் விழா நடக்கிறதல்லவா! அந்த விழாவின் போது இராவணன் போன்ற ஒரு சிலை செய்து அதனைக் கொளுத்தி மகிழ்வராம். அந்த இன்றியமையாத திருவிழாவைக் காண, அப்பட்டமான மதச்சார்பற்ற சர்க்காரை நடத்தும் நேரு பண்டிதர் இருக்கிறாரே, அவர் எங்கிருந்தாலும் ஓடோடியும் வந்துவிடுவாராம்! சிலை வடிவத்தில்உள்ள இராவணனைக் கொளுத்துவதைக் காண்பதில்—கண்டு களிப்பதில், அளவுகடந்த ஆனந்தம் பண்டித நேருவுக்கு.

அன்றைய சகுனிமாமா துரியோதனாதியர்களைக் கொன்றொழிப்பதைக் காண எவ்வளவு களிப்புடன் காத்துக் கிடந்தான் என்பதைப் பாரதக் கதை படிப்போர் நன்கறிவர்.

துரியோதனாதியர்கள் அழிய வேண்டுமென்பதில் சகுனி ஏன் அவ்வளவு கண்ணுங் கருத்துமாக இருந்தான்? கடைசிவரையில் துரியோதனாதியர்கட்கு நல்லது செய்பவனாகச் சித்தரிக்கப்பட்ட சகுனி, துரியோதனாதியர்களை அழிக்கவே சதி செய்தான் என்று பாரதப் பாதுகாவலர்களே கூறுகிறார்கள் என்றால், அதன் உட்பொருள் என்ன?

இன்றும் பார்க்கிறோமே, நல்லவர்களை நாசம் செய்ய நயவஞ்சக நரிகள் கையாளும் நட்புமுறையை!

சிரித்துப் பேசித் தட்டிக்கொடுத்து, ஆமாம் நீங்கள்சொல்றதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது......என்று இழுத்துப் பேசிச் சமயம் நேரும்போது இடிப் பொடிப்பவர்களை நாம் கண்கூடாகப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

அடிகள்

அன்று, சகுனியின் சதியை அறிய முடியாத துரியோதனாதியர்களைப்போல் இன்று பலர் நம்மிடையே இருக்கிறார்கள். எனவேதான் பாரதியாரின் இந்தக் கருத்தைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப் பலர் இன்னும் அஞ்சுகிறார்கள்.

"ஐவருக்கும் தேவி அழியாத பத்தினி" என்பதைப் பழமொழியாக்கி மகிழ்பவர் பலர் இன்னும் இருப்பதாலேயே துரியோதனனை நல்லவன் என்று சொல்ல அஞ்சுகின்றனர்.

சகுனியைப் பழமொழிக்கு இலக்காக்கி, "சகுனிபோல் இவன் ஒருத்தன் இருக்கிறான்" என்பது நம்மவர்களால் சாதாரணமாகக் கையாளப்பட்டுவரும் ஒரு பழிமொழியாகும், என்றபோதிலும் தருமனைக் கெட்டவன் என்று சொல்ல இவர்களால் முடிவதில்லை.

நல்லவர்களான துரியோதனாதியர்களைச் சகுனி சதிசெய்து அழித்துவிட்டான் என்பதை ஒப்புக்கொள்பவர்கள், தருமனுக்கும் துரோபதைக்கும் கோயில்கட்டிக் கும்பிடுகிறார்கள் என்றால், இப்படிப்பட்டவர்களின் குறைமதியைப் போக்க எந்த முறையைக் கையாள்வது!

துரியோதனாதியர்க்குத் துணைநின்ற துரோணர் போன்றவர்கட்கு நல்ல பெயரும், துரியோதனனுக்குச் சொந்த மாமன் என்று கூறப்படும் சகுனிக்குக் கெட்ட பெயரும் ஏற்பட—ஏற்படுத்தக் காரணம் என்ன? சூதாட்டத்தில் சிறிதும் விருப்பமில்லாத துரியோதனனுக்குத் தாயம் ஆடும் கெடுமதியைச் சகுனியே உண்டாக்கினான்-இல்லை, துரியோதனுக்குப் பதில் சகுனியே தாயமாடித் தருமனைத் தோற்கடித்தான் என்பது பாரதப் பாதுகாவலர்கள் ஒப்புக்கொண்ட உண்மையுமாகும்.

தனிப்பட்ட முறையில் துரியோதனனைச் சகுனிக்குப் பிடிக்காது என்பதற்காகவே துரியோதனாதியரைப் பழிவாங்க இருசாராருக்குமிடையே பகைமையை வளர்த்துவிட்டான் சகுனி என்பதையும் தருமாதியர்களை நல்லவர்களாக்கப் பாடுபட்டவர்கள் மறுப்பதில்லை.

எனவே, அன்று சகுனியால் நல்லவர்கள் என்று அறிவிக்கப்பட்ட துரியோதனாதியர்களை, அவ்விதம் அறியவிடாதபடி தடுக்க ஆரிய மதத் தலைவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி மிகப் பெரிது. அதற்குப் பக்கத்துணையாக நின்ற நம்மவர்கள் கூறிய காரணங்கள் அதைவிட ஏராளம். அவர்களின் முயற்சியைமுறியடித்து,இவர்களின் காரணங்களைத் தவிடுபொடியாக்கித் தருமன் சால்பு இதுவெனக் காட்டத் தைரியமாக முன்வந்த நாவலர் பாரதியாரின் கருத்து எல்லாவகையிலும் வரவேற்கக்கூடியதேயாம்.

★

REGD. NO. M. 4642

நீக்ரோ என்கிற காரணத்துக்காக ஓடஓட விரட்டிக்கொண்டிருக்கிறார்களே வெள்ளையர்கள். அவர்கள் விழுந்து விழுந்து விரும்பிப் படிக்கும் Three musketeers (மூன்று துப்பாக்கி வீரர்கள்) எனும் உயரிய நாவலைத் தீட்டிய அலெக்சாண்டர் டூமாஸ் யார் தெரியுமா? நீக்ரோமாதின் பேரன்! பாரிஸ் பட்டணத்திலிருந்தபடி, பார்முழுதும் புகழ் பரப்பிய டூமாஸின் நாவல்கள், மெய்சிலிர்க்கக் கூடியவை. அப்படிப்பட்டவைகளை எழுதும்போது, அவனாகவே சிரிப்பானாம்—அழுவானாம்—கைகால்களை உதறி உதறி அடிப்பானாம். அந்தளவுக்கு, கதைகளில் வரும் பாத்திரங்களோடு ஒன்றிவிடுவானாம். "ஏதோ எழுதித் தொலைப்போம்" என்பதற்காக அல்லாமல், எடுத்த காரியத்தில் இருதயத்தையே வைத்துவிடுவானாம். எழுத உட்கார்ந்துவிட்டால், அவனை யாரும் எழுப்பமுடியாதாம். சிந்தனை ஓடுகிறவரையில், ஓடவிட்டுக்கொண்டே இருப்பானாம். இதனால்தான்போலும் அவனால் 1200க்கு மேற்பட்ட கதைகளும் சரித நூல்களும்எழுத முடிந்திருக்கிறது! கால்ஸ்வொர்த்தி, பெர்னாட்ஷா, ஸ்டீவன்சன், வெல்ஸ், கிப்ளிங் முதலிய பெரும் ஆசிரியர்கள் யாவரும் எழுதிய எல்லா நூல்களும் இவன் எழுதிய பாதி நூற்களுக்குச் சமமெனச் சொல்லலாம். இவ்வளவு நூல்களையும் இவன் படுத்துக்கொண்டுதான் எழுதுவானாம். "நாவல் எழுதவேண்டுமா? சரி, கொண்டுவா நீலக் காகிதம்" "கவிதை தீட்ட, மஞ்சள் காகிதமே வேண்டும்" "கட்டுரையா? அதற்கு ரோஸ் கலர் நல்லது" என்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான தாட்களை உபயோகிப்பானாம். அதுபோலவே, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பேனாவையும் இங்கியையும் உபயோகிப்பானாம். எழுதுவதில் மட்டுமல்ல, சமையல் செய்வதிலும் டூமாஸ் மிகவும் கெட்டிக்காரனாம்!!

அவன் காலத்தில் வாழ்ந்த ஆசிரியர்களை விட அதிகம் சம்பாதித்தவன், இவன்தான். பத்துலட்சம் பவுன்! ஆனாலும் கடைசிக் காலத்தில், மேல் சட்டையை அடகுவைக்கவும், கண்டவர்களிடம் போய் பல்லிளிக்கவுமாகக் கஷ்டப்பட்டே செத்தான். காரணம், வரவுக்கு மிஞ்சி செலவுசெய்ததும், வாழ்க்கையை ஒழுங்காக அமைத்துக்கொள்ளாததும்தான். இத்துணைக்கும் இவன் சிறுவயதில் அனுபவித்த வறுமைக் கொடுமைகள் ஏராளம், இருந்தும், முன் எச்சரிக்கையில்லாமல் வாழ்ந்து தீர்த்தான். முதன் முதலாக இவனுடைய நாடகம் ஒன்றை நடிக்கிறார்கள். அதைப்போய்ப்பார்க்க ஒழுங்கான சட்டையில்லாமல், தவித்திருக்கிறான்.

இவனுக்குத் தன் அன்னையிடம் இருந்த அன்பு அபாரமாகும். முதல் நாடகம் அரங்கேறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு இவன் தாய், படுக்கையில் விழுந்துவிட்டாராம். வெற்றிமாலை சூடிவிட்டான் என்று ரசிகர்கள் நாடகத்தைப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தபொழுது இவன் வீட்டுக்கும் கொட்டகைக்குமாக ஓடிக்கொண்டிருந்தான். ஒரு காட்சியைப் பார்ப்பது, உடனே வீட்டுக்கு ஓடி 'அம்மா உடம்பு எப்படி இருக்கிறது?' என்று கேட்பது, மீண்டும் ஓடிவருவது, இப்படியே இருந்திருக்கிறான். நாடகம் முடிந்து பாரிஸ் நகரமே இவனைப் பாராட்டிக் கொண்டிருந்தபோது இவன் அன்னையின் கால்மாட்டில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தானாம்!

டூமாஸ், கிட்டத்தட்ட ஐரோப்பா முழுவதையும் சுற்றியிருக்கிறான். ஒரு சமயத்தில், இவனுடைய நாவல்கள் ஐந்து அல்லது ஆறு என்றுதான் பிரசுரமாகும். இருபது முறை, வாளும் கைத்துப்பாக்கியும் ஏந்திச் சண்டைகள் போட்டிருக்கிறான். ஆரம்பநாட்களில் 'கலியாணமே செய்துகொள்ளப் போவதில்லை' என்று சொல்லிக்கொண்டு இஷ்டம்போலத் திரிந்த இவன் கடைசியில் 'கட்டாயக் கலியாணத்துக்கு' ஆளானான். இவனைக் கவர்ந்த கட்டழகிகளில் ஒருத்தி, அவன் செலுத்தவேண்டி இருந்த கடன்களை எல்லாம் ஒரு விலைபோட்டு வாங்கிக் கொண்டாளாம்.

"டூமாஸ்! என்ன சொல்லுகிறாய்? இந்தக் கடன்களைத் தீர்க்கமுடியாமல் சிறைக்குப் போகிறாயா! அல்லது கலியாணம் செய்துகொள்கிறாயா!" என்று மிரட்ட, வேறு வழியில்லாமல் திருமணம் செய்துகொண்டானாம்.

அலெக்சாண்டர் டூமாஸ்—என்று எண்ணுகிறபோது அவன் உண்டாக்கிய கதைகளை நினைத்து ஆங்கிலமறிந்தோர், பேரானந்த மடைவர். 'வலிந்து' எழுதாமல், சில பாத்திரங்களை நடமாடவிடவே நூல்களைத் தீட்டியதுதான் அதற்குக் காரணம்.

—"வண்டு"

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.